# கல்லூரி மாணவர்களுக்கான வழிகாட்டி!

## படிப்போம்... ஜெயிப்போம்!



**INNER WHEEL CLUB OF MADRAS**

District 323

# கல்லூரி மாணவர்களுக்கான வழிகாட்டி!

## படிப்போம்... ஜெயிப்போம்!

IWCM

Copyright 2023 INNER WHEEL CLUB OF MADRAS, District 323

All rights reserved. No part of the book may be reproduced in any form, electronic or mechanical, including photocopy, recording, or any information storage or retrieval system, without permission in writing from the publisher.

Published in India

Author : Dr. G. Sakthivel Murugan

Content & Production Coordination: 'Chutti' Ganesan

Guidance: Sandhya Jaichandren & Javanthi Singaram

Layout & Designing : Kaleidoscope, Chennai.

Production : Graphic Network, Chennai.

IWCM

# Career Counselling
## for
# College Students

An initiative of

**Inner Wheel Club of Madras**

**District 323**

# 2022-23

**Sandhya Jaichandren**
President

**Javanthi Singaram**
Career Counselling Coordinator

# INNER WHEEL CLUB OF MADRAS, DISTRICT 323

# FOREWORD

Every year in Tamilnadu, more than 10 lakh students complete their college education from arts and science colleges and seek employment. A large number of these students pursue college education with the aim of securing a job with good remuneration. The years following graduation are a stressful period for the students and parents until such a job is secured.

While some graduates are successfully placed through campus recruitment and through job fairs, a majority of the graduate remain unemployed for long periods, as they lack knowledge of the several job opportunities available for them. Even though a college degree is essential, that by itself does not make a graduate employable. Jobs in several sectors require additional skills such as working or advanced knowledge of computer programmes, spoken English and even specialisation in the field.

IWCM

The Inner Wheel Club of Madras, District 323, has been working on its own and in association with the Corporation of Greater Chennai and NGOs to help school and college students by providing additional services. In 2021 a book on Career Guidance for 12th standard students, ***+2-விற்குப் பிறகு என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்...,*** was brought out to help students to select a course of study in college to help them secure gainful jobs. The eBook was distributed to all students in the 12th standard of High schools supported by the Corporation of Greater Chennai and Government of Tamilnadu in Chennai District. The book was also brought out in English as ***What shall I study after +2? How can I excel?***

The Inner Wheel Club of Madras felt there is now a greater need to equip college students with information about the vast job opportunities available to them. If they have this information before hand, they can study with focus and also better prepare themselves to satisfy the eligibility

criteria of jobs they desire. Hence, we have brought out this book ***கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டி! படிப்போம்... ஜெயிப்போம்!*** to be distributed in eBook form to students in arts and science colleges. The physical copies of the book will be made available in College and local libraries.

This eBook will include:

- job opportunities in Government, public / private sector undertakings and
  specific fields
- how to apply for above jobs
- entrance exams to be taken and how to prepare for them
- how to acquire additional knowledge and skills
- higher studies in the field
- skills required for entrepreneurship

We hope this eBook will be of help to college students and that they will benefit from the information provided. We look forward to hearing from the readers on ways to enhance and improve the content of the book.

**Sandhya Jaichandren**
President

**Javanthi Singaram**
Career Counselling Coordinator

IWCM

# பொருளடக்கம்


1. வாழ்க்கை தரத்தை மாற்றும் சிவில் சர்வீஸ் எக்ஸாம் 9
2. மத்திய அரசு அலுவலகங்களில் அதிகாரியாகலாம் வாங்க! 14
3. தமிழ்நாட்டின் முக்கிய அரசு அலுவலராகலாம் 17
4. நீதித்துறையில் வேலை 19
5. பாதுகாப்புப் படையில் பணி 20
6. வளர்ச்சி நிறைந்த பொதுத்துறை வேலைகள் 24
7. வளமான வங்கி மற்றும் இன்ஷூரன்ஸ் துறையில் வேலை 27
   7.1 வங்கித்துறையில் வேலை 27
   7.2 இன்ஷூரன்ஸ் துறையில் வேலை 30
8. வேலை வாய்ப்புக்குப் பட்டப்படிப்புடன் கூடுதல் படிப்புக்கான அவசியம் 35
9. வணிகவியல் மற்றும் கலைச்சார்ந்த படிப்புகள் 38
   9.1 BCom மற்றும் BBA படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 38
   9.2 BA Economics படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 42
   9.3 BA Public Administration and Political Science படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 44
   9.4 BA History படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 48
   9.5 BA English Literature படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 50
   9.6 Tamil Literature படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 53
   9.7 Visual Communication படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 57


IWCM

10. கணிதம் மற்றும் கணினி அறிவியல் படிப்புகள் 59

10.1 BSc Computer Science & BCA படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 59

10.2 BSc Maths & BSc Statistics படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 64

11. அறிவியல் மற்றும் உயிரியல் படிப்புகள் 67

11.1 BSc Physics படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 67

11.2 BSc Chemistry படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 70

11.3 BSc Zoology படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 75

11.4 BSc Biology படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 79

11.5 BSc Biotechnology படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 81

11.6 BSc Biochemistry படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 86

11.7 BSc Botany படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள் 89

12. துணை மருத்துவப் படிப்புகள் 92

12.1 இரண்டு ஆண்டு டிப்ளோமா படிப்புகள் 93

12.2 ஓராண்டு டிப்ளோமா படிப்புகள் 94

12.3 ஓராண்டு சான்றிதழ் படிப்புகள் 94

12.4 ஆறுமாத படிப்புகள் 95

13. உயர்கல்வி... எங்கு சேரலாம்? 97

13.1 Commerce and Arts Courses 99

13.2 Maths, Computer Science & Engineering 101

13.3 Science Courses 104

14. உயர்கல்வி படிக்க உதவித்தொகை 109

15. பட்டதாரிகள் சுயமாக தொழில் தொடங்க மானியத்துடன் கடனுதவி 111


IWCM

# முன்னுரை

**த**மிழ்நாட்டில் மட்டும் பட்டப்படிப்பை முடித்து ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்புக்குச் சந்தைக்கு வரும் இளைஞர்களின் எண்ணிக்கை பத்து லட்சத்துக்கும் மேல். இதனால் நாளுக்கு நாள் வேலை வாய்ப்புக்கான போட்டி அதிகரித்து வருகிறது.

ஆணோ, பெண்ணோ படிப்பை முடித்தவுடன் வேலை வாய்ப்பைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடனேயே படிக்கிறார்கள். படித்து முடித்தவுடன் எல்லோருக்கும் கேம்பஸ் இன்டர்வியூ வாய்ப்புகள் கிடைப்பதில்லை. பலரும் சரியான வழிகாட்டுதல் இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஒரு சிலர் அரசு நடத்தும் போட்டித்தேர்வுகளில் கலந்துக்கொண்டு வெற்றி பெற்று வேலை வாய்ப்பு பெறுகிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு என்ன மாதிரியான போட்டித்தேர்வுகள் இருக்கின்றன என்பதே அறியாமல் இருக்கின்றனர்.

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு, படித்து முடித்தவுடன் என்ன மாதிரியான வேலை வாய்ப்புகள் உள்ளன என்பது முன்கூட்டியே அறிந்துக்கொள்வதன் மூலம் வேலைவாய்ப்பு சந்தையில் போட்டியிடுவது எளிது.

'தற்போது கல்லூரி படிப்பை முடிக்கும் நிலையில் இருக்கேன். படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பைப் பெற அடுத்து என்ன செய்வது தெரியவில்லை' என்று யோசிக்கும் மாணவர்களுக்கு முன் உள்ள பல்வேறு வாய்ப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் வேலைவாய்ப்பு வழிகாட்டி நூலை தயாரித்து உள்ளோம்.

**கல்லூரி மாணவர்கள் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் இந்த நூலை Inner Wheel Club of Madras District 323 வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.**

இந்த வேலை வாய்ப்பு வழிகாட்டி நூலில், அடுத்த பத்தாண்டுகளில்

- வேலை வாய்ப்பை அள்ளி வழங்கும் துறைகள் என்னென்ன
- அரசு துறைகளில் வேலை வாய்ப்பைப் பெற என்ன செய்ய வேண்டும்
- என்னென்ன தேர்வுகள் எழுத வேண்டும்
- தேர்வுக்கு எவ்வாறு தயாராகுவது
- தனியார் நிறுவனங்களில் அதிக சம்பளம் பெறுவது எப்படி
- நீங்களே ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்றால் அரசு என்னென்ன உதவிகள் செய்கிறார்கள்

என்பதை எல்லாம் முழுமையாகத் தொகுத்து வழங்கி உள்ளோம்.

பட்டப்படிப்பு என்பது ஒரு துருப்புச்சீட்டுத்தான். அதை கொண்டு அடுத்த நிலைக்கு எப்படி உயர்கிறீர்கள் என்பதில் தான் உள்ளது உங்களது வெற்றி. உங்களைச் சுற்றி ஏராளமான வாய்ப்புகளும், வளங்களும் உள்ளன. உயர்நிலை அடைய முயல்வோம். உங்களுடைய முயற்சிக்கு இந்த நூல் ஒரு சிறிய அளவிலாவது உதவும் என நம்புகிறோம்.

IWCM

1




# வாழ்க்கை தரத்தை மாற்றும் சிவில் சர்வீஸ் எக்ஸாம்

IWCM

UPSC என்றழைக்கப்படும் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வின் மூலம் நிரப்பப்படும் IAS, IPS பணிகள் சமூகத்தில் மிகுந்த அந்தஸ்து கொண்டவை. இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் பல்வேறு பணிகளின் மூலம் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய முக்கிய பொறுப்புக்கு உரியவர்கள்.

## யுபிஎஸ்சி எக்ஸாம்

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எக்ஸாம் மூலம்,

- IAS Indian Administrative Services
- IPS Indian Police Service
- IFS Indian Foreign Service
- IRS Indian Revenue Service
- IAAS Indian Accounts and Audits Services
- IIS Indian Information Services

**மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1000 பேர் முதல் 1500 பேர் வரை சேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.**

என இருபதுக்கும் மேற்பட்ட பிரிவுகளில் உயர் பொறுப்பு மிக்க வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

**சிவில் சர்வீஸ் வேலைகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்க ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும் அல்லது இறுதி ஆண்டு படிப்பவராக இருக்க வேண்டும். அவ்வளவு தான்.**

கலைப்பாடத்தையோ, அறிவியல் பாடத்தையோ, பொறியியல் பாடத்தையோ, வேளாண்மை அல்லது கால்நடை மருத்துவம், எம்பிபிஎஸ் மருத்துவம் என ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்தவர்கள் இந்தத் தேர்வை எழுதலாம். தேர்வுக்கான பாடத்திட்டம் இணையத்தில் வெளியிடப்படுகிறது. www.upsc.gov.in

## சிவில் சர்வீஸ் எக்ஸாம்

**சிவில் சர்வீஸ் தேர்வு என்பது மூன்று நிலைகளைக் கொண்டது.**

I. **முதல் நிலைத் தேர்வு** (Preliminary Exam): முதல் நிலைத் தேர்வு அப்ஜக்டிவ் தேர்வாக உள்ளது. இது இரண்டு தாள்களைக் (Papers) கொண்டிருக்கும்.

a. General Studies I

b. CSAT (General Studies Paper-II)

முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அடுத்த நிலைத் தேர்வான முதன்மைத் தேர்வுக்குச் செல்ல முடியும்.

II. **இரண்டாவது முதன்மைத் தேர்வு**

முதன்மைத் தேர்வு என்பது Descriptive Exam தேர்வு

a. நான்கு பொது அறிவு தாள்கள்

b. விருப்பப் பாடம் சார்ந்த இரண்டு தாள்கள்

c. ஒரு கட்டுரை வடிவில் தாள்

d. ஒரு ஆங்கில மொழி தாள்

e. இந்திய மொழிகளில் ஒரு தாள் இருக்கின்றது

IWCM






III.நேர்முகத் தேர்வு

ஆக மொத்தம் ஒன்பது தாள்கள். ஒவ்வொரு தாளுக்கும் 250 மதிப்பெண்கள். இதில் ஆங்கில மொழித்தாளுக்கான மதிப்பெண்ணும், இந்திய மொழித்தாள் தேர்வுக்கான மதிப்பெண்ணும் இறுதிப் பட்டியலில் சேர்க்கப்படாது என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். இறுதி பட்டியலில் சேர்க்கப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

UPSC தேர்வில் மொத்த மதிப்பெண்கள் 2025 இதில்

- முதல் நிலைத் தேர்வு 400 மதிப்பெண்களுக்கும்
- முதன்மைத் தேர்வு 1750 மதிப்பெண்களுக்கும்
- நேர்முகத் தேர்வு 275 மதிப்பெண்களுக்கும் இருக்கும்

**முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் பணியைத் தேர்வு செய்யும் முறை இருக்கும்.**

தேர்வு எழுதுபவர்களின் விருப்பத்தின் அடிப்படையிலும், தரவரிசை பட்டியலில் உள்ள தகுதி நிலை அடிப்படையிலும் மாநில அளவில் பணி ஒதுக்கீடு செய்யப்படும். மற்ற மாநிலங்களில் ஒதுக்கீடு பெறும் போது அந்த மாநில மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

### தேர்வுக்கான பாடங்களைத் தேர்வு செய்யும் முறை

சிவில் சர்வீஸ் தேர்வில் விருப்பப்பாடங்களாக, வரலாறு, புவியியல், சமூகவியல், மானுடவியல், இயற்பியல், வேதியியல், கணிதம், சிவில் இன்ஜினீயரிங், எலெக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங், ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், மருத்துவம், வேளாண்மை என ஏகப்பட்ட பாடங்கள் இருக்கின்றன. இதில் ஏதேனும் ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம். இது உங்களுடைய விருப்பத்தை பொறுத்துத்தான்.

எந்த விருப்பப்பாடத்தை எடுத்தாலும் தகுந்த வழிகாட்டியும், தகுந்த புத்தகங்களும் இருக்கின்றனவா என்பதையும் முன்கூட்டியே கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.



### என்னென்ன புத்தகங்களை படிக்க வேண்டும்?

பொதுவாக, என்.சி.இ.ஆர்.டி. (NCERT), பாடப் புத்தகங்களைப் படிக்கலாம். சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தயாராகுபவர்கள், ஆரம்பத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அறிவியல், சமூக அறிவியல், மொழிப்பாடங்களையும் நன்கு ஆழ்ந்து படிக்கலாம். 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பாடத்தில் உள்ள பகுதியிலிருந்து முதல் நிலை கேள்விகள் கேட்கப்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### தேர்வுக்கு தயாராவதற்கு எவ்வளவு நாள் ஆகும்?

தேர்வுக்கு தயாராகுபவர்கள் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டிலேயே தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். முதல்நிலை தேர்வுக்கு பின்னர், முதன்மை தேர்வுக்கு தயாராக வேண்டும். முதல்நிலை தேர்வுக்கு பின்னர் ஓராண்டில் முதன்மை தேர்வுக்கு தயாராகிவிடலாம்.

### எந்த பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து படிப்பது?

கல்லூரி இறுதி ஆண்டு படிக்கும் போதே உங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் பயிற்சி மையங்களில் சேர்ந்து பயிற்சி மேற்கொள்ளலாம்.

### நாளிதழ்களை தினமும் படிக்க வேண்டுமா?

யுபிஎஸ்சி தேர்வில் நாட்டு நடப்புகள் முதன்மையாக இருப்பதால் நாளிதழ்களைப் படிப்பது அவசியம். இதில், அரசியல், பொருளாதார நிகழ்வுகளுக்கும், வெளிநாட்டு விவகாரங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நாளிதழ்களைப் படிக்க வேண்டும்.

### யுபிஎஸ்சி தேர்வுக்கு ஆங்கில அறிவு அவசியமா?

தேர்வு வினாக்கள் ஆங்கிலத்தில் தான் வரும். ஆகையால், ஆங்கில வினாக்களை புரிந்துக்கொண்டால் மட்டுமே சரியாக விடையளிக்க முடியும். ஆங்கில அறிவும் அவசியம். ஆர்வம் இருந்தால் தமிழிலும் தேர்வு எழுதலாம்.

### யுபிஎஸ்சி தேர்வுக்கான புத்தகங்கள் எங்கு கிடைக்கும்?

மாவட்ட மைய நூலகங்களில் போட்டித்தேர்வுக்கு என்று தனி பிரிவே உள்ளது. அங்கு சிவில் சர்வீஸ் தேர்வுக்கான நூல்கள் உள்ளன. ஆன்லைனில் நிறையவே கிடைக்கின்றன.

# POSTS UNDER CIVIL SERVICES

## Civil Services Posts under All India Services

- Indian Administrative Service (IAS)
- Indian Police Service (IPS)
- Indian Foreign Service (IFS)

## Posts under Group A Civil Services

- Indian Audit and Accounts Service (IAAS)
- Indian Communication Finance Services (ICFS)
- Indian Postal Service (IPoS)
- Indian Railway Traffic Service (IRTS)
- Indian Revenue Service (IRS)
- Railway Protection Force (RPF)
- Indian Civil Accounts Service (ICAS)
- Indian Railway Accounts Service (IRAS)
- Indian Railway Personnel Service (IRPS)
- Indian Trade Service (ITS)
- Indian Corporate Law Service (ICLS)
- Indian Defence Accounts Service (IDAS)
- Indian Defence Estates Service (IDES)
- Indian Information Service (IIS)
- Indian Ordnance Factories Service (IOFS)

IWCM

## Posts under Group B Civil Services

- Armed Forces Headquarters Civil Service
- DANICS - Delgu, Andaman, and the Nicobar Islands Civil Service
- Pondicherry Civil Service
- Pondicherry Police Service
- DANIPS - NCT of Delhi, Andaman & Nicobar Islands, Lakshadweep, Daman & Diu, and Dadra & Nagar Haveli Police Service DANIPS

2




# மத்திய அரசு அலுவலகங்களில் அதிகாரியாகலாம் வாங்க!

IWCM

யூனியன் பப்ளிக் சர்வீஸ் எக்ஸாமுக்கு அடுத்த இடத்தில் உள்ளது ஸ்டாப் செலக்‌ஷன் கமிஷன் (Staff Selection Commission) என்றழைக்கப்படும் மத்திய பணியாளர் தேர்வு ஆணையம். இந்த ஆணையத்தின் தேர்வின் மூலம் மத்திய அரசின் பல்வேறு பிரிவுகளில் உயர் பொறுப்பு வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

பல்வேறு மத்திய அரசு நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப பல்வேறு தேர்வுகளை நடத்துகிறது. இதில் பட்டப்படிப்பை முடித்துள்ள இளைஞர்கள் பங்கு பெறும் வகையில் நடத்தப்படும் ஒருங்கிணைந்த பட்டதாரி நிலை (CGL) தேர்வு மிக முக்கியமானது.

## SSC நடத்தும் தேர்வுகள்

| தேர்வுகள் | பணிகள் |
|---|---|
| SSC Combined Graduate Level | உதவி தணிக்கை அலுவலர், உதவி கணக்கு அலுவலர், ரெயில்வே துறை, மத்திய தலைமைச் செயலகம், வெளியுறவுத்துறை, நுண்ணறிவு அமைப்பு (Intelligence Bureau), வருமான வரித்துறை, மத்திய அமலாக்கப்பிரிவு, அஞ்சல் துறை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவு என மத்திய அரசின் பல்வேறு துறைகளிலுள்ள குரூப்-பி, மற்றும் குரூப் - சி அதிகாரிகள் |

| தேர்வுகள் | பணிகள் |
|---|---|
| Junior Engineer (JE) Exam | மத்திய அரசின் மத்திய பொதுப்பணித் துறை (CPWD), மத்திய நீர் ஆணையம் (CWC), மற்றும் ராணுவப் பொறியியல் சேவைகள் (MES) |
| Scientific Assistant Exam | இந்திய வானிலை ஆய்வுத் துறையில் (IMD) அறிவியல் உதவியாளர் பணி |
| Combined Higher Secondary Level (CHSL) Exam | லோயர் டிவிஷன் கிளர்க் Lower Division Clerk (LDC), டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் (Data Entry Operator -DEO), தபால் உதவியாளர்/ வரிசைப்படுத்தல் உதவியாளர் (Postal Assistant/ Sorting Assistant), நீதிமன்ற எழுத்தர் (Court Clerk) |
| Multi-Tasking Staff (MTS) Exam | மத்திய செயலக சேவை, ஆயுதப்படை தலைமையகம் மற்றும் ரயில்வே வாரியம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளில் மல்டி டாஸ்கிங் ஸ்டாஃப் பணி |
| Stenographer Grade C & D Exam | பல்வேறு அரசுத் துறைகளில் ஸ்டெனோகிராபர் கிரேடு சி மற்றும் டி பணிகள் |
| Junior Hindi Translator (JHT) Exam | பாதுகாப்பு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம் மற்றும் மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளில் ஜூனியர் ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பணி |
| Central Police Organization (CPO) Exam | மத்திய ரிசர்வ் போலீஸ் படை (Central Reserve Police Force), எல்லைப் பாதுகாப்புப் படை (Border Security Force), இந்தோ-திபெத் எல்லைக் காவல் (ITBP) போன்ற பல்வேறு மத்திய காவல் நிறுவனங்களில் சப் இன்ஸ்பெக்டர் பணி |
| (Constable (GD) Exam) | மத்திய ரிசர்வ் போலீஸ் படை (Central Reserve Police Force), எல்லைப் பாதுகாப்புப் படை (Border Security Force) போன்ற பல்வேறு மத்திய ஆயுதக் காவல் படைகளில் (Central Armed Police Forces) கான்ஸ்டபிள் (பொதுப்பணி) பணி |

IWCM

## SSC தேர்வு முறைகள்

மத்திய பணியாளர் தேர்வு ஆன்லைன் மூலமாக இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது.

1. **முதல் நிலைத் தேர்வில்,** General Intelligence and Reasoning (25 கேள்விகள், 50 மதிப்பெண்கள்) General Awareness (25 கேள்விகள், 50 மதிப்பெண்கள்) Quantitative Aptitude (25 கேள்விகள், 50 மதிப்பெண்கள்) English Comprehension (25 கேள்விகள், 50 மதிப்பெண்கள்) என 100 வினாக்கள் கேட்கப்படும்.

2. **இரண்டாம் அமர்வில்** (Session-2) கணினியில் தட்டச்சு செய்யும் தேர்வு (Data Entry Speed Test) நடைபெறும். இதற்கான கால அளவு 15 நிமிடங்கள். இவ்வாறு தேர்வு நடைமுறைகளை தெரிந்துக்கொள்வதோடு திட்டமிட்டு படித்தால் நீங்களும் மத்திய அரசு அலுவலகங்களில் உயர் அலுவலராக மாறலாம்.

**முதல் நிலைத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில், இரண்டாம் நிலைத் தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.**

இரண்டாம் கட்டத்தேர்வும் கொள்குறி வகையில் தான் இருக்கும். இதிலும் நெகட்டிவ் மதிப்பெண் முறை (Negative Marking) இருக்கும். இரண்டாம் கட்டத் தேர்வில் கணிதம், ஆங்கிலம், பொது அறிவு மற்றும் புத்திக் கூர்மை ஆகிய பகுதிகள் இடம்பெறும். இத்துடன் கணினி அறிவு தொடர்பான 20 வினாக்கள் அடங்கிய பகுதியும் உண்டு.

IWCM





பொருளடக்கம்

3




## தமிழ்நாட்டின் முக்கிய அரசு அலுவலராகலாம்

தமிழ்நாட்டில் உள்ள அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள பல்வேறு பணிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான பல்வேறு தேர்வுகளை நடத்துகிறது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Tamil Nadu Public Service Commission).

IWCM

### TNPSC தேர்வுகள்

| தேர்வுகள் | பணிகள் |
|---|---|
| குரூப்-I சர்வீசஸ் தேர்வு | துணை ஆட்சியர், துணைக் காவல் கண்காணிப்பாளர், உதவி ஆணையர் மற்றும் துணைப் பதிவாளர் பணி. இவர்கள் குறிப்பிட்ட கால பணிக்கு பின்பு ஆட்சியர், காவல் துறையின் உயர்பொறுப்புகளில் பணி அமர்த்தப்படுவார்கள். |
| குரூப்-II சர்வீசஸ் தேர்வு | தலைமைச்செயலக பணிகள், துணைப் பதிவாளர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர், தொழிலாளர் உதவி ஆய்வாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் மூத்த ஆய்வாளர் போன்ற பணிகள். |
| குரூப்2-ஏ சர்வீசஸ் தேர்வு | பல்வேறு துறைகளில் உதவியாளர், கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையில் கணக்காளர் மற்றும் தலைமைச் செயலகத்தில் உதவியாளர் போன்ற பணிகள். |
| குரூப்-IV சர்வீசஸ் தேர்வு மற்றும் கிராம நிர்வாக அலுவலர் தேர்வு | ஜூனியர் அசிஸ்டெண்ட், பில் கலெக்டர், ஃபீல்டு சர்வேயர், டிராஃப்ட்ஸ்மேன் மற்றும் டைப்பிஸ்ட் போன்ற பணிகள், கிராம நிர்வாக அலுவலர் பணி. |

| தேர்வுகள் | பணிகள் |
|---|---|
| ஒருங்கிணைந்த பொறியியல் சேவைகள் தேர்வு | பல்வேறு துறைகளில் உதவிப் பொறியாளர், ஜூனியர் ஆர்க்கிடெக்ட் மற்றும் தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் போன்ற பணிகள். |
| தமிழ்நாடு வனத் துறைப் பணித் தேர்வு | வனவர், வனக் காவலர்கள். |
| தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க சேவை தேர்வு | உதவி வேளாண்மை அலுவலர்கள். |
| தமிழ்நாடு மீன்வளத் துறைப் பணித் தேர்வு | மீன்வள உதவி இயக்குநர் மற்றும் மீன்வள ஆய்வாளர் பணி. |
| தமிழ்நாடு கைத்தறி மற்றும் ஜவுளி துறைச் சேவைத் தேர்வு | தமிழ்நாடு கைத்தறி மற்றும் ஜவுளி துறையில் கைத்தறி உதவி ஆய்வாளர்கள். |
| தமிழ்நாடு மருத்துவ சேவைத் தேர்வு | மருத்துவ அதிகாரி, உதவி மருத்துவ அலுவலர் மற்றும் உதவி அறுவை சிகிச்சை நிபுணர். |

IWCM

**மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு தேர்வு வகைக்கும் அதற்கான விண்ணப்பதாரர்களின் தகுதி, வயது வரம்பு மற்றும் தேர்வு முறைகள் மாறுபடும்.**

- குரூப் 1, குரூப் 2, குரூப் 2ஏ போன்ற தேர்வுகளுக்கு பட்டதாரி இளைஞர்களாக இருக்க வேண்டும்.
- குரூப் 4 தேர்வுக்கு பத்தாம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது.
- மேலும், குரூப் 2 பிரிவிலேயே நேர்முகத்தேர்வு உள்ளவை, நேர்முகத்தேர்வு இல்லாதவை என இரண்டு பிரிவுகள் உண்டு.
- TNPSC தேர்வின் அறிவிப்பிலேயே ஒவ்வொரு தேர்வுக்கான பாடத்திட்டம் தெளிவாகக் கொடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் தேர்வுகளில் குரூப் 1 தேர்வு என்பது ஆண்டுக்கு ஒரு முறை சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைக்கூட நடத்தப்படும்.

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளுக்கு தயாராகுபவரில் பலர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெறுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

4




# நீதித்துறையில் வேலை

**நீ**திமன்றத்தில் பணி செய்யச் சட்டம் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்தவர்களுக்கும் கைநிறைய சம்பளத்துடன் வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

நீதிமன்ற நடவடிக்கைகள் அன்றைய தினமே இணையத்தில் பதிவேற்றப் படுகின்றன. நீதிமன்ற கோப்புகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாகின்றன. இதனால், நீதித்துறையில் பல பணி வாய்ப்புகள் உருவாகி உள்ளன.

IWCM

## நீதிமன்றத்தில் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள்

- Junior Assistants
- Typist
- Computer Operator
- Reader/ Examiner
- Xerox Operator
- Personal Assistants

## வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன்கள்

1. வேகமாகத் தட்டச்சு செய்யும் திறன் (ஆங்கிலம் மற்றும் தமிழில் நிமிடத்துக்கு 35 வார்த்தைகளைத் தட்டச்சு செய்யக்கூடிய திறன்)
2. கம்ப்யூட்டரை நன்கு இயக்கும் திறன் (தனியாகச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்)
3. நன்கு குறிப்பெடுக்கும் திறன் (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி) – ஸ்டேனோகிராப், மாடர்ன் ஆபிஸ் பிராக்டிஸ் (DCOM – Modern Office Practices) போன்ற பயிற்சிகளை முடித்தவர்கள்.

சென்னை உயர்நீதிமன்றத்திலும், மதுரை கிளையிலும், மாவட்ட நீதிமன்றங்களிலும் பல பணிக்கு அவ்வப்போது இணையத்தில் விளம்பரம் செய்து ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு: https://www.mhc.tn.gov.in/recruitment/login

வழக்கறிஞர்கள் அலுவலகங்களில் நல்ல முறையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டச்சு செய்யவும், கோப்புகளைத் தயாரிக்கவும் அதிகளவில் ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

**உச்சநீதிமன்றம்
கடந்த ஆண்டு (2022)
ஜூனியர் அசிஸ்டண்ட் பதவிக்கு
210 பேரைத் தேர்வு செய்தது.
இவர்களுக்கு மாதச் சம்பளம்
ரூ.63,000. மேலும் விவரங்களுக்கு:
https://main.sci.gov.in/recruitment**

5




## பாதுகாப்புப் படையில் பணி

பாதுகாப்புப் படை பணி என்பது தேசத்தின் மதிப்புமிக்க மற்றும் மரியாதைக்குரிய பதவிகளில் ஒன்று. சாகசம் மற்றும் சவால்களைத் தேர்ந்தெடுக்க விரும்பும் பட்டதாரி இளைஞர்களுக்குப் பாதுகாப்புப் படை ஏற்றப்பணி.

IWCM

### பாதுகாப்புப் படை பணியில் நான்கு முதன்மையான சீருடைப் பணிகள்

- இந்திய இராணுவப்படை
- இந்திய விமானப்படை
- இந்திய கடற்படை
- இந்திய கடலோர காவல்படை

மேற்கண்ட சீருடைப்பணிகளைத் தவிர, பல்வேறு துணை ராணுவ அமைப்புகளிலும் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களிலும் வேலைக்குச் சேரலாம்.

**ஓர் நாடு ஓர் இனம்:** இந்திய பாதுகாப்புப் படையில் சேர சாதி, வகுப்பு, மதம் மற்றும் சமூகம் என எந்த ஒதுக்கீடும் கிடையாது. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்குமான பணி. நிர்ணயிக்கப்பட்ட உடல்தகுதி, உடல்நலம் மற்றும் கல்வித்தகுதியைப் பெற்றிருந்தால் போதும்.

### பாதுகாப்புப் படை அதிகாரியாக அகில இந்திய அளவில் போட்டித் தேர்வு

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேசிய பாதுகாப்பு அகாடமி (NDA) மற்றும் கடற்படை பாதுகாப்பு அகாடமி (NA)-க்கான தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

இந்தத் தேர்வில் கலந்துகொள்ள பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்றிருந்தால் போதும் என்றாலும் பட்டதாரி இளைஞர்களே அதிகளவில் தேர்வெழுதி தேர்வாகின்றனர். மேலும் விவரங்களுக்கு:

https://www.upsc.gov.in/sites/default/files/Notif-NDA-II-23-engl170523-.pdf



**இந்திய இராணுவப் படை மற்றும் விமானப்படையில் பெண்கள்**

IWCM

- இந்திய இராணுவத்திலும், விமானப்படையிலும் பெண்களும் சேரலாம்.
- இவர்கள் தொழில்நுட்பம் அல்லாத பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, சிறப்பு பிரிவு என பல்வேறு பிரிவுகளைத் தேர்ந்தெடுக்கலாம்.
- இவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு பணி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்பு நான்கு ஆண்டுகள் வாய்ப்பு நீட்டிக்கப்படும்.
- B.E., B.Tech இறுதியாண்டு படிக்கும் பெண்கள், ஏற்கெனவே படித்து முடித்தவர்கள் தொழில்நுட்பப் பிரிவில் சேர விண்ணப்பிக்கலாம்.

## ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவை தேர்வு (Combined Defence Services Examination)

- இந்தத் தேர்வுக்கு பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- இந்தத் தேர்வில் வெற்றிபெறுகிறவர்கள் இந்திய இராணுவம், விமானப்படை அல்லது கப்பற்படையில் நிரந்தர பணியில் சேரலாம்.
- குறுகிய கால பணிக்குச் சென்னையில் உள்ள அதிகாரிகள் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று பணியில் இணையலாம்.
- பட்டப்படிப்பில் தொழில்நுட்ப படிப்பை முடித்தவர்கள், பாதுகாப்புப்படையில் தொழில்நுட்ப பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம்.
  மேலும் விவரங்களுக்கு:

  https://www.upsc.gov.in/sites/default/files/Notif-CDS-II-23-engl170523-R.pdf

| | |
|---|---|
| **இந்திய இராணுவப்படை பணி** | https://www.joinindianarmy.nic.in/how-to-join.htm |
| **இந்திய விமானப்படை பணி** | https://indianairforce.nic.in/career-in-iaf |
| **இந்திய கடற்படையில் வேலை** | https://www.joinindiannavy.gov.in/en/page/selection-procedure.html |

மேற்கண்ட இரண்டு தேர்வுகளைத் தவிர, இந்திய இராணுவமும், கடற்படையும், விமானப்படையும் தனித்தனியே ஆட்கள் தேர்வுக்கான விளம்பரம் செய்து தேர்வு நடத்தி ஆட்களைத் தேர்வு செய்து வருகின்றன. அதிலும் கலந்துகொண்டு வேலை வாய்ப்பைப் பெறலாம். ஒவ்வொரு முறையும் விளம்பரம் செய்யும் போதும் தகுதிநிலை குறித்து முழு விவரங்களும் தெரிவிக்கப்படுகிறது.

### இந்திய கடலோர காவல்படையில் பணி (Indian Coast Guard)

கடலில் மனித உயிர்களைக் காப்பாற்றுவது மற்றும் மீனவர்களுக்கு ஆபத்தில் உதவுவது, வேட்டையாடுபவர்களைப் பிடிப்பது மற்றும் கடல் பல்லுயிர்களைப் பாதுகாப்பது வரை, கடலோரக் காவல்படையின் வேலை. இந்திய கடலோர காவல்படையில் அதிகாரியாகவும், மாலுமியாகவும் நுழையலாம். இதற்கு இந்திய கடலோர காவல் படை தனியேத் தேர்வு வைக்கிறது.

மேலும் விவரங்களுக்கு: https://joinindiancoastguard.gov.in/officerentry.html

### மத்திய காவல் படைகள்

இந்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஐந்து மத்திய ஆயுத போலீஸ் படைகள்.

**எல்லைப் பாதுகாப்புப் படை (Border Security Force-BSF):** இது இந்தியாவின் பல சட்ட அமலாக்க நிறுவனங்களில் ஒன்றாகும். இது தற்போது உலகின் மிகப்பெரிய எல்லைக் காவல் படையாக உள்ளது. எல்லைப் பாதுகாப்புப் படையில் சேர https://rectt.bsf.gov.in/#bsf-current-openings

**மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (Central Industrial Security Force-CISF):** அணுசக்தி நிறுவனங்கள், விண்வெளி மையங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், மத்திய அரசு கட்டிடங்கள் மற்றும்

**கல்லூரியில் என்சிசியில் (NCC) இருக்கும் மாணவர்களுக்கு (ஆண்/பெண்கள்) சிறப்பு அடிப்படையில் இந்திய இராணுவம், விமானப்படை, கப்பற்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள்.**

பாரம்பரிய நினைவுச்சின்னங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் முதன்மையான பாதுகாப்பு நிறுவனமாகும். மத்திய தொழில்பாதுகாப்பு படையில் சேர https://www.cisfrectt.in

**வேலை கால அளவு**

பாதுகாப்புப் படை பணிகளில் நீண்ட காலப் பணி Permanent Commission (PC) மற்றும் குறுகிய காலப் பணி Short Service Commission (SSC) என்று இரண்டு வகை உண்டு. நீண்ட காலப் பணி என்பது ஓய்வுப்பெறும் வயது வரை பணியாற்றுவது. குறுகிய காலப் பணி என்பது ஐந்து ஆண்டுகள். அதன் பின்பு விருப்பத்தின் பேரில் பணிக்காலத்தை நீட்டித்துக்கொள்ளலாம்.

### ஆபிஸர் பதவிக்கு குறைந்த நிலையிலான பணிகள்

இந்திய இராணுவத்தில் ஆபிஸர் நிலைக்கு கீழே உள்ள பணிகளுக்கு, ஏழு மண்டல தேர்வு அலுவலகங்கள், இரண்டு கூர்க்கா தேர்வு மையங்கள், ஒரு தன்னாட்சி தேர்வு அலுவலகம், 59 இராணுவ தேர்வு பணி அலுவலகங்கள், இதைத்தவிர 47 ரெஜிமென்டல் மையங்களிலும் ஆட்தேர்வு நடத்தப்படுகிறது.

**மத்திய ரிசர்வ் போலீஸ் படை (Central Reserve Police Force-CRPF):** இது சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்கவும் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் காவல்துறை நடவடிக்கைகளில் மாநில/யூனியன் பிரதேசங்களுக்கு உதவுவதற்கான அமைப்பு. இந்த அமைப்பில் சேர https://rect.crpf.gov.in

IWCM

**இந்தோ திபெத்திய எல்லைக் காவல்படை (Indo-Tibetan Border Police - ITBP):** இது ஒரு சிறப்பு மலைப் படை. பெரும்பாலான அதிகாரிகளும், படை வீரர்களும் தொழில்ரீதியாக மலையேற்றப் பயிற்சி பெற்றவர்கள். இப்படையில் சேர https://recruitment.itbpolice.nic.in

**சஷாஸ்த்ரா சீமா பால் (Sashastra Seema Bal - SSB):** என்பது உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு எல்லைக் காவல் படை (BGF). இப்படையில் சேர http://www.ssbrectt.gov.in

**அசாம் ரைபிள்ஸ் (Assam Rifles):** என்பது 46 பட்டாலியன்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாக அமைப்பு. இது இந்திய-மியான்மர் எல்லைக்கான எல்லைக் காவல் படையாக உள்ளது. மேலும் விவரங்களுக்கு: https://www.assamrifles.gov.in

**தேசிய பாதுகாப்புப் படை (National Security Guard- NSG):** ராணுவ வீரர்கள் மற்றும் சிறப்பு ரேஞ்சர் குழுக்களை (SRG) உள்ளடக்கிய சிறப்பு நடவடிக்கைக் குழு (SAG).

மேற்கண்ட படைகள் தனித்தனியே விளம்பரம் செய்து பல்வேறு பணிகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்கின்றன. இத்தகைய பணியிலும் பட்டதாரி இளைஞர்கள் விண்ணப்பித்து வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

6




# வளர்ச்சி நிறைந்த பொதுத்துறை வேலைகள்

IWCM

'சேர்ந்தால் அரசு வேலையில் தான் சேர்வேன்' என்று இலக்கோடு செயல்படுபவர்களுக்கு பொதுத்துறை நிறுவனங்கள் நல்ல சாய்ஸ். பொதுத்துறை நிறுவனங்கள் என்பது மத்திய அரசின் முழு பங்களிப்போடு அல்லது மத்திய, மாநில அரசின் பங்களிப்போடு செயல்படும் நிறுவனங்கள். இந்தியாவில் 300-க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன.

### யாருக்கு வேலை வாய்ப்பு

பொதுத்துறை நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி நிறுவனங்களாக இருப்பதால் பொறியியல் படித்தவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம். பாலிடெக்னிக், ஐடிஐ படித்தவர்களுக்கும் அதிகளவில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இந்த நிறுவனங்களில் பொறியியல் மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு மட்டும் ஆண்டுக்கு ஐம்பதாயிரம் பேரைத் தேர்வு செய்து வருவதாக மனிதவள நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன. அரசு வேலையை விட பொதுத்துறை நிறுவனப்பணிகளில் சலுகைகளும் அதிகம், பதவி உயர்வுகளும் உடனுக்குடன் கிடைக்கும்.

### இந்தியாவில் மிகவும் பிரபலமான பொதுத்துறை நிறுவனங்கள்

- National Thermal Power Corporation (NTPC)
- Oil and Natural Gas Corporation (ONGC)
- Steel Authority of India Limited (SAIL)
- Bharat Heavy Electricals Limited (BHEL)



பொருளடக்கம்

- Indian Oil Corporation Limited (IOCL)
- Coal India (COI)
- Gas Authority of India Limited (GAIL)
- Bharat Electronics (BHL)
- Hindustan Petroleum Corporation Limited (HPCL)
- Bharat Petroleum Corporation Limited (BPCL)
- Indian Oil Corporation Limited (IOCL)
- Power Grid Corporation of India (POWER GRID)

**GATE தேர்வில் வெற்றி பெற்றால் பொதுத்துறை நிறுவனத்தில் வேலை**

**பல பொதுத்துறை நிறுவனங்கள் GATE தேர்வுகளில் தேர்ச்சிபெற்றிருப் பவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறார்கள். இந்த வாய்ப்பை பொறியியல் படித்தவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். GATE தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பித்த பின்பு, குழு விவாதம் மற்றும் நேர்முகத்தேர்வுக்கு பின்னர் பணி வாய்ப்பு வழங்கப்படுகிறது. பொதுத்துறை நிறுவனங்களில் சேர பட்டப்படிப்பில் 60 சதவிகிதத்துக்கும் அதிகமான மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்**

IWCM

### அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள்

- Indian Space Research Organisation (ISRO)
- Indira Gandhi Centre for Atomic Research (IGCAR)
- Tata Institute of Fundamental Research (TIFR)
- Indian Institute of Science, Bangalore (IISC)
- Indian Veterinary Research Institute (IVRI)
- Indian Agricultural Research Institute (IARI)
- Bhabha Atomic Research Centre (BARC)
- Department of Atomic Energy (BAE)

போன்ற அறிவியல் பின்புலமாக கொண்டு செயல்படும் நிறுவனங்கள் சிஎஸ்ஐஆர் நெட் (CSIR NET) தேர்வின் அடிப்படையில் பணியில் சேரலாம்.

- DRDO – Defence Research and Development Organization
- DRDL – Defence Research & Development Laboratory



- NPCIL - Nuclear Power Corporation of India Ltd
- NMDC - National Mineral Development Corporation
- HAL - Hindustan Aeronautics Limited
- RINL - Rashtriya Ispat Nigam Limited
- RECL - Rural Electrification Corporation Limited
- RRB - Railway Recruitment Boards
- ECI - Electronics Corporation of India

IWCM

போன்ற பல பொதுத்துறை நிறுவனங்கள் நேரிடையாகத் தேர்வு நடத்தியும் பணியாளர்களைத் தேர்வு செய்கின்றன.

பொதுத்துறை நிறுவனங்களில் நிர்வாகப்பணிகளுக்கு B.Com., BBA., MBA போன்ற மேலாண்மை சார்ந்த படிப்பை முடித்தவர்களைத் தேர்வு செய்கின்றனர்.

7




# வளமான வங்கி மற்றும் இன்ஷூரன்ஸ் துறையில் வேலை

IWCM

## 7.1 வங்கியில் துறையில் வேலை

**வ**ங்கித்துறையை இரண்டாகப் பிரிக்கலாம் – தனியார் வங்கிகள் மற்றொன்று அரசு பொதுத்துறை வங்கிகள்.

பொதுத்துறை வங்கிகள் தங்களுக்குத் தேவையான பணியாளர்களை இரண்டு விதமாக தேர்வு செய்கின்றன.

- அனைத்து வங்கிகளும் இணைந்து நடத்தும் தேர்வு
- ஒவ்வொரு வங்கியும் தனியே தேர்வு வைத்து தங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்வது.

### எவ்வளவு சம்பளம்?

தனியார் வங்கிகளில் தேர்வுச் செய்யப்படுகிறவர்களுக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் ஆரம்ப சம்பளமாகக் கிடைக்கிறது. ஆனால், பொதுத்துறை வங்கிகளில் தேர்வுச் செய்யப்படுகிறவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் சம்பளமாகக் கிடைக்கிறது. வங்கிகள் தங்கள் ஊழியர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம், வேலை பாதுகாப்பு மற்றும் பல சலுகைகளை வழங்குகின்றன.

தனியார் வங்கியில் மார்க்கெட் பிரிவில் பணியாற்றுவதுபோல் வேலை பார்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. பொதுத்துறை வங்கியில் பணி செய்வது என்பது நிர்வாகி போல் பணி செய்ய வேண்டும்.

## முதன்மையான வங்கித் தேர்வுகள்

வங்கித் தேர்வில் மிக முக்கியமானது பாரத ஸ்டேட் வங்கி நடத்தும் SBI ப்ரோபேஷனரி ஆபீசர்ஸ் (PO), SBI எஸ்ஓ தேர்வு, SBI கிளார்க் தேர்வும், Institute of Banking Personnel Selection (IBPS)என்றழைக்கப்படும் வங்கி கூட்டமைப்பு நடத்தும் தேர்வுகளும் தான்.

## SBI ப்ரோபேஷனரி ஆபீசர்ஸ் (PO) தேர்வு

SBI வங்கியின் நிர்வாகப் பணிக்கான ஆட்களைத் தேர்வு செய்து வருகிறது. SBI PO தேர்வு மூன்று நிலைகளைக் கொண்டது.

SBI PO தேர்வு வங்கிக்கான சிறப்பு அதிகாரிகளை Specialist Officer (SO) தேர்ந்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எஸ்பிஐ கிளார்க் தேர்வு, வங்கி நிறுவனங்களின் எழுத்தர் கேடருக்கு ஜூனியர் அசோசியேட்களைத் தேர்ந்தெடுக்கிறது.

**SBI PO பிரிலிமினரி தேர்வின் மூலம் மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையில் சுமார் 2.8% பேராக வடிகட்டி பிரதான தேர்வுக்கு அனுப்புகிறது.**

## IBPS PO தேர்வு

பல்வேறு பொதுத்துறை வங்கிகள் (PSB) மற்றும் அதன் உறுப்பினர்களாக இருக்கும் சில காப்பீட்டு நிறுவனங்களுக்கான ப்ரோபேஷனரி அதிகாரி பதவிக்கு பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது IBPS PO தேர்வு. IBPS ஸ்பெஷலிஸ்ட் ஆபிசர்ஸ் தேர்வு, IBPS எழுத்தர் தேர்வு, கிராமப்புறங்களில் சேவை செய்யும் சிறிய வங்கிகளுக்கான பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் IBPS RRB தேர்வு என பல தேர்வுகளை நடத்துகிறது.

வங்கித் தேர்வுப் பாடத்திட்டம், தேர்வு செயல்முறை போன்றவை விண்ணப்ப விளம்பரத்திலேயே தெரிவிக்கப்படும்.

வங்கித் தேர்வின் பாடத்திட்டமானது ரீசனிங் & கம்ப்யூட்டர் ஆப்டிட்யூட், தரவு பகுப்பாய்வு & விளக்கம், பொது அறிவு, பொருளாதாரம், வங்கி விழிப்புணர்வு மற்றும் ஆங்கிலம் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

**ஒவ்வொரு ஆண்டும் ரிசர்வ் வங்கியின் அதிகாரி பணியிலிருந்து ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவின் அதிகாரி பணி வரை பல பணிகளுக்குத் தேர்வு நடந்துக்கொண்டே இருக்கின்றன.**

## வங்கித் தேர்வுக்கு வயது வரம்பு

முப்பது வயது வரை வங்கித் தேர்வு எழுதலாம். வங்கித் தேர்வில் ஒரு முறை வெற்றி பெற்று வேலை கிடைத்து விட்டால் அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு நல்ல சம்பளத்துடன் வங்கியாளராக வலம் வரலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

**அடிக்கடி நடத்தப்படும் மிகவும் பிரபலமான வங்கித் தேர்வுகள் யாவை?**

- SBI ப்ரோபேஷனரி அதிகாரி தேர்வு
- IBPS Probationary Officer தேர்வு
- RBI கிரேடு B அதிகாரி தேர்வு
- SBI ஜூனியர் அசோசியேட் தேர்வு
- IBPS எழுத்தர் தேர்வு
- RBI உதவியாளர் தேர்வு
- IBPS RRB Probationary Officer தேர்வு

**வங்கித் தேர்வின் மூலம் நிரப்பப்படும் முக்கிய வங்கிப்பணிகள் என்னென்ன?**

- பல்வேறு வங்கி நிறுவனங்கள் பல பணிகளுக்கு, வங்கி தேர்வுகளின் மூலம் ஆட்களைத் தேர்வு செய்கின்றன. இதில் மிக முக்கியமான மூன்று பதவிகள் : வங்கி ப்ரோபேஷனரி அதிகாரி (வங்கி PO) வங்கி சிறப்பு அதிகாரி (வங்கி SO) உதவி/ எழுத்தர் பணியாளர் (வங்கி எழுத்தர்)

IWCM

**ஒரு வங்கி PO வின் சம்பளம் என்ன?**

- வங்கித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று Probationary Officer பணி வாய்ப்பைப் பெறுபவர்களுக்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரை கிடைக்கும்.

**வங்கித் தேர்வில் வெற்றி பெற என்ன படிக்க வேண்டும்?**

- பல வங்கித்தேர்வுகள் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தைக் கொண்டுள்ளன. கீழ்கண்ட ஐந்து முக்கியமான பகுதிகள் இடம்பெற்றிருக்கும். பகுத்தறியும் திறன் மற்றும் பொது நுண்ணறிவு (Reasoning Ability and General Intelligence)
- அளவியல் திறன் மற்றும் எண்ணியல் திறன் (Quantitative Aptitude and Numerical Ability)
- பொது/வங்கி/நிதி விழிப்புணர்வு (General/Banking/Finance Awareness)
- ஆங்கில மொழி மற்றும் வாய்மொழித் திறன் (English Language and Verbal Ability), கணினி அறிவு (Computer Awareness) போன்ற பகுதிகள் நிச்சயம் இடம்பிடித்திருக்கும். வங்கித்தேர்வுக்கான விளம்பரங்களில் தெளிவான பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறைக்கான விவரங்கள் இடம்பெற்றிருக்கும்.



### 7.2 இன்ஷூரன்ஸ் துறையில் வேலை வாய்ப்பு

IWCM

**முக்கியத்துவம் பெறும் இன்ஷூரன்ஸ் துறை:** அதிகரித்து வரும் நோயின் தாக்கம், வாகனங்கள் அதிகரிப்பு, நாளுக்கு நாள் நிகழும் விபத்துகள், இயற்கை பேரிடர்கள் காப்பீட்டின் மகத்துவத்தைப் புரிய வைக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் செய்யும் நிறுவனங்களாக காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன. பொதுவான பாலிசியுடன், ஹெல்த் பாலிசி, மோட்டார் வாகன பாலிசி, டிராவல் பாலிசி, புதியதாக செல்போன் வாங்கும் போது பாலிசி என இன்ஷூரன்ஸ் வர்த்தகம் பல பிரிவுகளில் நுழைந்துள்ளன.

நாளுக்கு நாள் பல புதிய திட்டங்கள், புதிய நிறுவனங்கள் என காப்பீட்டுத்துறையும் வளர்ச்சியடைந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பலருக்கும் வாய்ப்புகளை வழங்கும் இத்துறை, பொதுத்துறை நிறுவனங்களுக்கு இணையான ஒன்றாக கருதப்படுகிறது.

### என்னென்ன வேலை வாய்ப்புகள்?

**இன்ஷூரன்ஸ் விற்பனையாளர்கள்** தற்போது ஆலோசகராக மாறி உள்ளனர். இவர்கள் இன்ஷூரன்ஸ் நிறுவனத்துக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் பாலமாக உள்ளனர். இவர்கள் இன்ஷூரன்ஸ் பாலிசி விற்பது, தேவையான ஆலோசனை வழங்குவது, க்ளைம் பெற்றுத்தருவது போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர். இவர்கள் நிறுவனத்தின் ஊழியராக இருக்க மாட்டார்கள். இன்ஷூரன்ஸ் பாலிசிகளை விற்பதன் மூலம் இவர்களுக்கு கமிஷன் கிடைக்கும்.

**அன்டர்ரைட்டர் (Underwriter):** ஒவ்வொரு காப்பீட்டு விண்ணப்பத்தை அலசி ஆராய்ந்து ரிஸ்க்கை கணக்கில் கொண்டு மதிப்பீடு செய்வது இவருடைய முதன்மையான வேலை.



பொருளடக்கம்

Claims Adjuster – பாதிக்கப்பட்ட இன்ஷூரன்ஸ் பாலிசிதாரர்களிடம் பேசி, தகுந்த சான்றிதழ்களைக் கேட்டு பெற்றுக்கொண்டு பாதிப்பின் அளவை மதிப்பீடு செய்வதும், இழப்பீட்டை நிர்ணயிப்பதும் இவருடைய வேலை.

Actuary: காப்பீட்டு நிறுவனங்களுக்கான நிதி அபாயங்களை மதிப்பிடுவதிலும் நிர்வகிப்பதிலும் இவர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். சிக்கலான தரவுகளை பகுப்பாய்வு செய்து இன்ஷூரன்ஸ் பிரீமியங்களை நிர்ணயிக்கிறார்கள். இதற்கான படிப்பு சென்னை ஸ்கூல் ஆஃப் எக்னாமிக்ஸில் உள்ளது.

Risk Manager: காப்பீட்டு நிறுவனங்கள், தங்களுடைய பாலிசிதாரர்களின் அபாயங்களை அறிந்து அதற்கு தகுந்தாற்போல் பாலிசி தொகையை நிர்ணயிக்கிறது. இதில், காப்பீட்டு நிறுவனத்தின் நிதி, செயல்பாடு, உள்ளிட்ட பல்வேறு உள்ளீட்டுகளை கொண்டு மதிப்பீடு செய்வதும் இவர்களின் வேலை.

Sales Manager – விற்பனை மேலாளர்கள் மற்றும் ஏஜெண்ட்டுகளை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்கிறார்கள். புதிய வணிக வாய்ப்புகளை அடையாளம் கண்டு, முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

Customer Service Representative: வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகள் பாலிசிதாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் பணியை மேற்கொள்கின்றனர்.

IWCM

Product Manager: காப்பீட்டுத் திட்டங்களையும் மற்றும் சேவைகளையும் நிர்வகிக்கும் பொறுப்பு இவர்களுடையது.

மேற்கண்ட எட்டு பொறுப்புகள்தான் முக்கியமானவை என்றாலும் தற்போது தொழில்நுட்ப மேம்பாட்டால், கம்ப்யூட்டர் நெட்வொர்க் நிர்வகிப்பது, அலுவலக



நிர்வாகத்தை கவனிப்பது, வாடிக்கையாளர்களுக்குச் சேவையை எளிமைப்படுத்துவதற்கு புதிய ஆப்களை அறிமுகப்படுத்துவது என தொழில்நுட்ப பணிகளும் நிறைந்துள்ளன.

இன்ஷூரன்ஸ் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்பவர்கள், நிச்சயம் மூன்று விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### மிக முக்கியமான மூன்று நிறுவனங்கள்

அனைத்து இன்ஷூரன்ஸ் நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் அமைப்பு **Insurance Regulatory and Development Authority of India (IRDAI).** இதனுடைய இணையதளத்தில் https://irdai.gov.in இன்ஷூரன்ஸ் நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்கள், விதிமுறைகள், கொள்கைகள் என அனைத்து விவரங்களும் உள்ளன. இதனை ஒரு முறை பார்வையிடுவது அவசியம்.

இரண்டாவது, **National Insurance Academy (NIA)** என்ற நிறுவனம் இன்ஷூரன்ஸ் குறித்து ஏராளமான படிப்புகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் வெளியிட்டு வருகிறது. இதனையும் நீங்கள் பார்வையிடலாம். இதற்கான இணையதளம்: www.niapune.org.in

இன்ஷூரன்ஸ் துறையில் இருப்பவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளையும், சான்றிதழ் படிப்புகளையும் வழங்குகிறது **Insurance Institute of India (III)** நிறுவனம். இந்த நிறுவனத்தின் இணையதளத்தில் இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் நடத்தும் தேர்வுக்கான தயாரிப்பு விவரங்களையும், மாதிரி கேள்வித்தாள்கள் மற்றும் தேர்வுக்கு உதவும் குறிப்புகளையும் வழங்குகிறது. இணையதள முகவரி:

https://www.insuranceinstituteofindia.com

IWCM

### தேர்வு செய்யும் முறை

ஒவ்வொரு இன்ஷூரன்ஸ் நிறுவனமும் தன்னுடைய இணையதளத்திலேயே ஆட்கள் தேர்வு செய்வதற்கான தகவலை வழங்கி வருகின்றன. அதனால் ஒவ்வொரு இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் இணையதளத்தில் ஆட்கள் தேர்வு செய்யப்படுவதற்கான பக்கத்தில், ஆட்கள் தேர்வு, தகுதி நிலை, தேர்வுக்கான பாடத்திட்டங்கள் போன்ற அனைத்து விவரங்களும் வழங்கி இருப்பார்கள்.

சில போட்டித்தேர்வு தளங்களிலும், இன்ஷூரன்ஸ் தேர்வுக்கான பாடத்திட்டங்கள், பாடக்குறிப்புகள், மாதிரி கேள்வித்தாள்கள் என பலவற்றையும் தொகுத்து உள்ளனர். அதனையும் பார்வையிடலாம்.

www.bankersadda.com

www.oliveboard.in

### முதன்மையான பொதுத்துறை இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள்

- LIC AAO (Assistant Administrative Officer) & LIC ADO (Apprentice Development Officer) Exam www.licindia.in
- New India Assurance Company Limited NIACL AO (Administrative Officer) Exam www.newindia.co.in



IWCM

- United India Insurance Company Limited - UIIC AO (Administrative Officer) Exam and Generalist and Specialist Exam www.uiic.co.in
- Oriental Insurance Company Limited OICL AO (Administrative Officer) Exam www.orientalinsurance.org.in
- General Insurance Corporation of India - Assistant Manager Exam: www.gicofindia.com
- Insurance Regulatory and Development Authority of India (IRDAI) Junior Officer Exam www.irdai.gov.in
- Agriculture Insurance Company of India Limited AIC AO (Administrative Officer) Exam www.aicofindia.com

பல வங்கிகள் தனியாக இன்ஷூரன்ஸ் பிரிவை வைத்துள்ளன. இங்கு, Sales Manager, Insurance Advisor, Relationship Manager போன்ற பணி வாய்ப்புகள் உள்ளன. பல இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் உடல்நலம் சார்ந்த ஹெல்த் இன்ஷூரன்ஸ் பிரிவிலும் செயல்பட்டு வருகின்றன. இங்கும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

- ICICI Prudential Life Insurance Company Limited www.iciciprulife.com
- HDFC Life Insurance Company Limited www.hdfclife.com
- SBI Life Insurance Company Limited https://www.sbilife.co.in
- Max Life Insurance Company Limited www.maxlifeinsurance.com

- Bajaj Allianz Life Insurance Company Limited www.bajajallianzlife.com
- Tata AIA Life Insurance Company Limited www.tataaia.com
- Reliance Nippon Life Insurance Company Limited www.reliancenipponlife.com
- Kotak Mahindra Life Insurance Company Limited insurance.kotak.com
- Aditya Birla Sun Life Insurance Company Limited www.adityabirlacapital.com
- Exide Life Insurance Company Limited https://www.hdfclife.com
- PNB MetLife India Insurance Company Limited www.pnbmetlife.com
- Bharti AXA Life Insurance Company Limited www.bharti-axalife.com
- Future Generali India Life Insurance Company Limited https://life.futuregenerali.in
- Aviva Life Insurance Company India Limited www.avivaindia.com
- Canara HSBC Oriental Bank of Commerce Life Insurance Company Limited www.canarahsbclife.com

IWCM

ஹெல்த் இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் Sales Manager, Insurance Advisor, Relationship Manager போன்ற பணி வாய்ப்புகளுடன் Claims Manager என்ற வாய்ப்பையும் வழங்குகின்றன.

## ஹெல்த் இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள்

- ICICI Lombard General Insurance Company Limited www.icicilombard.com
- HDFC ERGO General Insurance Company Limited www.hdfcergo.com
- Max Bupa Health Insurance Company Limited www.maxbupa.com
- Star Health and Allied Insurance Company Limited www.starhealth.in
- Religare Health Insurance Company Limited www.religarehealthinsurance.com

## 8




# வேலை வாய்ப்புக்குப் பட்டப்படிப்புடன் கூடுதல் படிப்புக்கான அவசியம்

IWCM

**க**ல்லூரியில் நல்ல கோர்ஸில் சேர்ந்து விட்டால் வேலையும் கிடைத்துவிடும் என்று சும்மா இருந்தால் வேலை வாய்ப்பு எட்டாக்கனியாகிவிடும். பட்டப்படிப்பு படிக்கும் போது வெறும் பாடப்புத்தகத்தை மட்டும் படித்தால் வேலை வாய்ப்பு சந்தையில் கவனிப்பாரின்றி இருப்பீர்கள்.

இப்பிரிவில், ஒவ்வொரு பட்டப்படிப்பு சார்ந்த டிப்ளோமா படிப்புகளையும், சான்றிதழ் படிப்புகளையும் தொகுத்து வழங்கியுள்ளோம்.

- இந்தத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள படிப்புகள் பெரும்பாலானவை இந்திய பல்கலைக்கழகங்களாலும், தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களாலும் வழங்கப்படுபவை.
- ஒரு சில படிப்புகள் ஆன்லைனில் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுபவை. இதற்கான கட்டணம் என்பது மிகவும் குறைவு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- இந்த படிப்புகள் உலகளாவிய அளவில் பிரபலமாக அல்லது பலராலும் கற்றுக்கொண்டிருக்கக்கூடிய அல்லது வேலை வாய்ப்பை வழங்கும் நிறுவனங்களின் விருப்பத் தேர்வாக இருப்பவை.

**வேலை வாய்ப்புச் சந்தையில் உங்களை நீங்கள் தனி அடையாளப்படுத்திக் கொள்ள, பட்டப்படிப்புடன் கூடுதல் படிப்புகளையும், கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களையும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.**

- இதைப் போலவே, ஒவ்வொரு பட்டப்படிப்புடன் சம்பந்தப்பட்ட கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களையும், மென்பொருள்கள் குறித்தும் தகவல் வழங்கியுள்ளோம்.
- ஒரு சில கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களை நீங்களே இணையத்தை பயன்படுத்திக் கற்றுக்கொள்ளலாம்.
- ஒரு சில மென்பொருள்களை பயிற்சி மையங்களுக்கு சென்று தான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கும். ஆனால், அவ்வாறு கற்றுக்கொண்டு முறையான சான்றிதழ்களைப் பெறும் போது அதற்கான பலனாக நல்ல வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

கூடுதல் படிப்பை வழங்கும் கல்வி நிறுவனத்தின் இணையதள முகவரியை வழங்கியுள்ளோம். கல்வி நிறுவனங்கள் இணையதளத்தை தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டே இருப்பதால் சில நேரங்களில் இணைப்புகள் செயல்படாமல் போகவும் வாய்ப்புகள் இருக்கிறது. நீங்கள் கல்விநிறுவனத்தின் பெயரையும், படிப்பின் பெயரையும் இணைத்துக் கூகுளில் தேடினால் சம்பந்தப்பட்ட கூடுதல் படிப்பு குறித்த இணைய பக்கத்துக்கு நேரிடையகச் சென்று பார்க்கலாம்.

**ஏன் கூடுதலாக பட்டயப்படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு?**

**பட்டப்படிப்பு படிக்கும் போது பெரும்பாலான பாடங்கள் தியரியாக இருக்கும். இந்த தியரி, கொள்கைளை விளக்குபவையாக இருக்கும். இவை தற்போது நடைமுறையில் வேலை வாய்ப்புக்கு உதவாது. ஆனால், வேலை வாய்ப்புக்கு பிராக்கடிக்லாக சில தகுதிகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.**

IWGM

ஒரு சில கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்கள் அதிக விலை மதிப்புக் கொண்டவை. அதனை குறிப்பிட்டக் காலத்துக்குச் சோதனை முறையில் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கிறார்கள். அந்த சோதனைமுறை காலத்தில் உங்களுக்கு குறிப்பிட்ட கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் பயனுள்ளதாக இருக்கிறதா, கற்றுக்கொள்வதற்கு உகந்ததாக உள்ளதா என்பதை குறித்து எல்லாம் அறிந்துக்கொள்ளலாம்.

### பட்டயப்படிப்பு + கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ்

கூடுதலாக படிக்கும் பட்டயப் படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு உங்களுக்கு செயல்முறை விளக்கத்தை அதிகளவில் வழங்கும்.

பாடத்திட்டம் சார்ந்த கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஷனைக் கற்றுக்கொண்டால், உங்களை பல நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு தேர்வு செய்யும் நிலையை நீங்கள் உருவாக்கிக்கொள்ள முடியும்.

### எவ்வளவு செலவாகும்?

கூடுதல் தகுதியை வளர்த்துக்கொள்ள நிறைய செலவாகுமே என்று நினைக்கலாம். ஆனால், நீங்கள் பட்டப்படிப்புக்கு செய்யும் செலவில் பத்தில் ஒரு பங்கு செலவு செய்தாலே போதும்.

## என்னென்ன தகுதிகள் வேண்டும்?

பட்டப்படிப்புடன் தேவையான தகுதிகள் என்ன என்பதை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

- ஒன்று, பட்டப்படிப்பு படிக்கும் அனைவருக்கும் இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள்
- இரண்டாவது, நீங்கள் விரும்பும் வேலைக்கான கூடுதல் தகுதிகள்

## அடிப்படைத் தகுதிகளில் முதன்மையானது

- கம்யூனிக்கேஷன் ஸ்கில் என்றழைக்கப்படும் தொடர்பியல் திறன்
- கம்ப்யூட்டர் அறிவு

### அடிப்படைத் தகுதிகள்

**Communication Skills:** எல்லா இடங்களிலும் எதிர்பார்ப்பது கம்யூனிகேஷன் ஸ்கில் என்றழைக்கப்படும் தொடர்பியல் திறன்தான்.

தெளிவாகவும், நம்பிக்கையுடன் கருத்துகளை வெளிப்படுத்தும் திறனே மிக முக்கியமான திறன்.

இது தாய்மொழியில் இருந்தால் மட்டும் போதாது. ஆங்கிலமொழித்திறனும் அவசியம்.

ஆங்கிலமொழித்திறனை வளர்த்துக்கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுவதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

IWCM

**Spoken English:** ஆங்கில உரையாடல் திறனை வளர்த்துக் கொள்ளக் கூடுதலாக பயிற்சி வகுப்புக்கும், இணைய வழியில் பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

**Computer Knowledge:** இன்று அலுவலகப் பணியில் மிக முக்கிய பங்காற்றுவது கம்ப்யூட்டர் தான். நீங்கள் பன்னாட்டு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தாலும் சரி, உங்கள் பகுதியில் உள்ள பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தாலும் சரி, உங்களுக்கு கம்ப்யூட்டரை நன்கு இயக்கத் தெரியுமா என்பதைத்தான் எதிர்பார்ப்பார்கள்.

பட்டப்படிப்பு படிக்கும்போது கம்ப்யூட்டரை நன்கு இயக்க கற்றுக்கொள்ள வேண்டும். குறைந்த பட்சம், மைக்ரோசாஃப்ட் ஆபிஸை (Microsoft Office) முழுமையாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- MS Excel, MS Word, MS PowerPoint Presentation என்ற மூன்று அப்ளிகேஷனையும் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்.
- Google Workspace கற்றுக்கொள்ள வேண்டும்.
- இதில் **Gmail, Google Worksheets, Google Docs** அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும்.




# வணிகவியல் மற்றும் கலை சார்ந்த படிப்புகள்

## 9.1 BCom மற்றும் BBA படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

தற்போது பி.காம் மற்றும் பி.பி.ஏ படிப்பவர்கள், படித்து முடித்தவர்கள் கீழ்கண்ட டிப்ளோமா அல்லது சான்றிதழ் படிப்பைப் படித்து உங்களுடைய தகுதியைப் மேம்படுத்திக்கொள்ளலாம்.

IWCM

### Diploma in Banking and Finance

வங்கி மற்றும் நிதி சார்ந்த படிப்பைப் படிப்பவர்களுக்கு வங்கி மேலாளர் (bank manager), முதலீட்டு வங்கியாளர் (investment banker) மற்றும் நிதி ஆய்வாளர் (financial analyst) போன்ற பல பணிகள் தனியார் வங்கித்துறையில் கிடைக்கும்.

தற்போது வங்கித்துறையும், இதர வங்கிசாரா நிதித்துறையும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதனால் குறிப்பிட்ட பிரிவில் நிபுணத்துவம் பெறுபவர்களுக்கு வாய்ப்புகளும் அதிகம்.

வங்கி மற்றும் நிதி சார்ந்த டிப்ளோமா மற்றும் சான்றிதழ் படிப்பை இந்தியாவில் உள்ள பல பல்கலைக்கழகங்களும் வழங்குகின்றன. இதில் முதன்மையாக உள்ளது தேசிய வங்கி மேலாண்மை நிறுவனம் (National Institute of Bank Management). இதன் இணைய முகவரி: https://www.nibmindia.org.

### Certificate in Financial Planning

தற்போது வங்கியில் காப்பீட்டு பிரிவும், முதலீட்டு பிரிவும் இடம்பிடிக்கத் தொடங்கி இருக்கின்றன. நிதி சேவைகளை வங்கிகள் தொடர்ந்து விரிவாக்கம் செய்து வருவதையும் கண்கூடாகப் பார்த்து வருவீர்கள். நிதித் திட்டமிடல் சான்றிதழ் படிப்பை முடிப்பவர்களுக்கு நிதித் திட்டமிடுபவர், முதலீட்டு ஆலோசகர், நிதி மேலாண்மை ஆலோசகர் போன்ற வாய்ப்புகள் நிறைந்திருக்கின்றன.

இந்திய அளவில் புகழ்ப் பெற்ற நிதித் திட்டமிடல் தரநிலை வாரியத்தில் (Financial



பொருளடக்கம்

Planning Standards Board (FPSB) நிதித் திட்டமிடல் சான்றிதழ் படிப்பை முடிப்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம். மேலும் விவரங்களுக்கு: https://india.fpsb.org

## Diploma in Financial Management

பங்குச்சந்தை முதலீடு, மியூச்சுவல் ஃபண்ட் என நிதி மேலாண்மை பிரிவும் வளர்ச்சியடைந்து வருகிறது. இதனால் பட்டப்படிப்போடு டிப்ளோமா பைனான்சியல் மேனேஜ்மென்ட் படிப்பவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம்.

பைனான்சியல் மேனேஜ்மென்ட் படிப்பை முடிப்பவர்களுக்கு, நிதி மேலாளர், நிதிக் கட்டுப்பாட்டாளர், தலைமை நிதி அதிகாரி போன்ற பணிகள் காத்திருக்கின்றன.

மேற்கண்ட படிப்பை இந்தியாவின் பட்டய நிதி ஆய்வாளர்கள் நிறுவனம் (Institute of Chartered Financial Analysts of India - ICFAI) என்ற தனியார் கல்வி அமைப்பு நடத்துகிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.icfaiuniversity.in

## Certificate in Taxation

நாட்டில் தனிநபர் வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. ஜிஎஸ்டி அறிமுகப்படுத்திய பின்பு ஒவ்வொரு ஆண்டும் ஜிஎஸ்டி வரி வசூலும் அதிகரித்து வருகிறது.

இதனால், வரிவிதிப்பு குறித்த சான்றிதழ் படிப்பை முடிப்பவர்களுக்கு வாய்ப்புகள் உண்டு. பன்னாட்டு நிறுவனங்கள் வரி சார்ந்த ஆலோசனைப் பிரிவுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன.

IWCM

வரிவிதிப்பு முறைகள் குறித்த படிப்பை முடிப்பவர்களுக்கு வரி ஆலோசகர், வரி கணக்காளர், வரி ஆய்வாளர் போன்ற பணிகள் கிடைக்கும்.

மேற்கண்ட படிப்பை Taxmann Academy என்ற அமைப்பு வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.taxmann.com

## Certificate in Banking and Finance

வங்கியின் செயல்பாடுகள் முதலீடுகளை மட்டும் நம்பி இல்லை. வங்கியின் வாடிக்கையாளர்களில் கடன் பெறுபவர்கள் முக்கியமானவர்களே.

வங்கியின் நிதி சேவைகள் பட்டதாரிகளுக்கான வாய்ப்புகளை வாரி வழங்குகின்றன. இந்த வங்கி மற்றும் நிதிக்கான சான்றிதழ் படிப்பை முடித்தவர்களுக்கு வங்கியாளர் (Banker), கடன் ஆய்வாளர் (Credit Analyst), கடன் அதிகாரி (Loan Officer) போன்ற வாய்ப்புகள் கிடைக்கும்.

மேற்கண்ட படிப்பை இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனம் (Indian Institute of Banking and Finance IIBF) வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.iibf.org.in

## Diploma in Investment Management

முதலீட்டு வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. எங்கு முதலீடு செய்வது, எதில் முதலீடு செய்வது, ரிஸ்க் எவ்வளவு என்பதை எல்லாம் கணிப்பது கடினம். இதற்கான நிபுணத்துவத்தை வழங்குகிறது முதலீட்டு மேலாண்மை டிப்ளோமா படிப்பு. முதலீடு



குறித்த நிபுணத்துவத்தால் முதலீட்டு ஆய்வாளர், போர்ட்ஃபோலியோ மேலாளர், முதலீட்டு ஆலோசகர் என பொறுப்புமிக்க வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

மேற்கண்ட படிப்பை இந்திய மியூச்சுவல் ஃபண்ட் சங்கம் (Association of Mutual Funds in India - AMFI) வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.nism.ac.in/certifications

## Certificate in Cost and Management Accounting

நிறுவனத்தை இலாபகரமானதாக மாற்றுவதற்கு மிகவும் மெனக்கெட வேண்டி இருக்கிறது. செலவுகளைக் கட்டுப்படுத்தி உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே நிறுவனம் வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும். இதற்கான வழியைக் காட்டுகிறது செலவு மற்றும் மேலாண்மை கணக்கியல். இது உற்பத்தியில் ஆரம்பித்து வரி செலுத்துவது வரி அனைத்திலும் எவ்வளவு சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என வழிகாட்டுகிறது.

இதனால் செலவு மற்றும் மேலாண்மை கணக்கியலில் சான்றிதழ் படிப்பை முடிப்பவர்களுக்கு, செலவு கணக்காளர், மேலாண்மை கணக்காளர், பட்ஜெட் ஆய்வாளர் போன்ற பல பணிகள் காத்திருக்கின்றன.

மேற்கண்ட படிப்பை வழங்குகிறது மத்திய அரசின் ஒரு அங்கமாக உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் காஸ்ட் அக்கவுண்டன்ட்ஸ் ஆஃப் இந்தியா (Institute of Cost Accountants of India - ICAI) கல்வி நிறுவனம். மேலும் விவரங்களுக்கு: https://icmai.in/icmai

## NSE Academy's Certification in Financial Markets (NCFM)

வங்கி, ஷேர் மார்க்கெட், மியூச்சுவல் ஃபண்ட் போன்றவற்றை நிர்வகிக்கும் நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் நிதித் திட்டமிடல் மற்றும் செல்வ மேலாண்மை பிரிவுகளில் வேலை வாய்ப்பைப் பெற தேசிய பங்குச்சந்தை நடத்தும் சான்றிதழ் படிப்பிலும் சேரலாம்.

மேலும் விவரங்களுக்கு: https://www.nseindia.com/learn/self-study-ncfm-modules-all

## Digital Marketing & E-commerce Certification

ஒரு காலத்தில் ஆடம்பர பொருள்கள் மட்டுமே ஆர்டர் செய்து வாங்கியது போய், இன்று அத்தியாவசிய பொருள்களைக் கூட ஆன்லைனில் வாங்கும் காலத்துக்கு மாறி இருக்கிறோம். இதனால் டிஜிட்டல் மார்க்கெட்டிங் பிரிவுக்கு ஏகப்பட்ட மவுசு கூடி இருக்கிறது. இதனால் டிஜிட்டல் மார்க்கெட்டிங் சான்றிதழ் படிப்பு வேலை வாய்ப்பு மிகுந்ததாக மாறியுள்ளது.

இத்துறையில் டிஜிட்டல் மார்க்கெட்டிங் நிபுணர், சமூக ஊடக சந்தைப்படுத்தல் மேலாளர், ஈ-காமர்ஸ் மேலாளர் என ஏகப்பட்ட பணி வாய்ப்புகள் உள்ளன. கூகுள் நிறுவனமே டிஜிட்டல் மார்க்கெட்டிங் குறித்த கோர்ஸ்களை ஒருங்கிணைக்கிறது.

மேலும் விவரங்களுக்கு: https://grow.google/intl/en_in/certificates

https://learndigital.withgoogle.com/digitalgarage/course/digital-marketing

https://www.nseindia.com/learn/self-study-ncfm-modules-all

IWCM

## BCom / BBA படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/ Software

BCom, BBA படிப்பவர்கள் குறைந்தது கீழ்கண்ட ஏதேனும் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஷனைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். இது உங்களுடைய வேலை வாய்ப்புக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

1. Microsoft Excel
2. Tally ERP 9
3. SAP Business One

மைக்ரோ சாஃப்ட் எக்செல் இப்போது பள்ளியிலேயே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ஆனால், அதை சிறப்பாகக் கற்றுக்கொண்டால் நிறுவனங்களில் டேட்டா அனாலிஸ்ட்ஸ், பைனான்சியல் அனாலிஸ்ட்ஸ், அக்கவுண்ட்டண்ட் போன்ற பல பணிகளுக்கு உதவியாக இருக்கும்.

https://support.microsoft.com/en-us/office/excel-video-training-9bc05390-e94c-46af-a5b3-d7c22f6990bb

டாலி சாப்ட்வேர் இப்போது சிறு வணிக நிறுவனங்கள் முதல் பெரு நிறுவனங்கள் வரை பயன்படுத்தி வருகின்றன. பி.காம் படிக்கும் மாணவர் குறைந்தது டாலி அப்ளிகேஷன்ஷனை பயன்படுத்த கற்றுக்கொண்டால் உள்ளூரிலேயே வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

https://tallysolutions.com/download/#gref



IWCM

பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய திட்டப்பணிகளுக்கு SAP அப்ளிகேஷன்ஷனைப் பயன்படுத்தி வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற விரும்புவோர் SAP அப்ளிகேஷன்ஷனை நன்கு பயன்படுத்தவும், மேம்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

https://www.sap.com/india/index.html

## 9.2 BA Economics படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

பொதுவாக, பொருளியல் படித்தால் வேலை கிடைக்குமா, கிடைக்காதா என்று யோசிப்பவர்கள் அதிகம். ஆனால், Economics படிக்கும் போது, திட்டமிட்டு படித்தால் பன்னாட்டு நிறுவனங்களிலும், வங்கிகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

பொருளியல் படிக்கும் போது கீழ்கண்ட படிப்பில் கவனம் செலுத்தி குறிப்பிட்ட பிரிவில் நிபுணத்துவம் பெறலாம்.

### Certificate in Econometrics

பொருளாதார அளவியல் என்பது புள்ளிவிவர மற்றும் தர பகுப்பாய்வு மூலம் பொருளாதார முன் கணிப்புக்கான அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

பொருளாதார அளவியலில் நிபுணத்துவம் பெறும் போது, பொருளாதார நிபுணர் (econometrician), ஆராய்ச்சி ஆய்வாளர் (research analyst) மற்றும் தரவு விஞ்ஞானியாக (data scientist) வேலை வாய்ப்பைப் பெறலாம்.

Certificate in Econometrics படிப்பை Delhi School of Economics, Delhi University http://econdse.org வழங்குகிறது.

## Certificate in Environmental Economics

புதிய திட்டப்பணிகள் மேற்கொள்ள திட்டமிடும் போது சுற்றுச்சுழலுக்கு பாதிப்பில்லா வகையில் எவ்வாறு நிறைவேற்றுவது என கருத்தில் கொள்ளப்படுகிறது. இதற்கு முதன்மையாக உள்ளது சுற்றுச்சூழலில் பொருளாதாரம்.

மேற்கண்ட படிப்பை முடித்து நிபுணத்துவம் பெறும் போது சுற்றுச்சூழல் பொருளாதார நிபுணர், கொள்கை ஆய்வாளர் மற்றும் நிலைத்தன்மை பிரிவு ஆலோசகர் போன்ற பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கும்.

சுற்றுச்சூழலில் பொருளாதார படிப்பை டெல்லியில் உள்ள The TERI School of Advanced Studies https://www.terisas.ac.in வழங்குகிறது.

## Diploma in International Trade

உலகளாவிய வர்த்தக அமைப்பின் எல்லை விரிந்துக்கொண்டே இருக்கிறது. இதனால், வர்த்தக அமைப்பின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் புரிந்துக்கொண்டு வர்த்தகத்துக்கு வழிகாட்ட நிபுணத்துவம் கொண்டவர்களின் தேவை உள்ளது.

சர்வதேச வர்த்தகத்தை குறித்து அறிந்தவர்களுக்கு வர்த்தக ஆய்வாளர் (trade analyst), சுங்க நிபுணர் (customs specialist) மற்றும் சர்வதேச வர்த்தக ஆலோசகர் (international trade consultant) போன்ற வேலை வாய்ப்புகள் உள்ளன.

IWCM

சர்வதேச வர்த்தக படிப்பை வழங்குகிறது டெல்லியில் உள்ள The Indian Institute of Foreign Trade கல்வி நிறுவனம்.

இதன் இணையதள முகவரி: https://www.iift.ac.in/iift/index.php

## Diploma in Financial Analysis and Modelling

ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையை ஆய்வு செய்து எதிர்காலத்தில் நிதி சார்ந்து என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளலாம் என திட்டமிடுவது பைனான்சியல் மாடலிங். இது வணிக கணக்கியல் மற்றும் நிர்வாகத்துக்கு இன்றியமையாத விஷயம். இதற்கான நிபுணத்துவம் பெற்றவர்களை உருவாக்குவது தான் பினான்சியல் அனாலிசிஸ் மற்றும் மாடலிங் படிப்பின் நோக்கம்.

இந்தப் படிப்பை முடிப்பவர்களுக்கு நிதி ஆய்வாளர் (financial analyst), முதலீட்டு ஆய்வாளர் (investment analyst) மற்றும் போர்ட்ஃபோலியோ மேலாளர் (portfolio manager) போன்ற பல பணிகள் காத்திருக்கின்றன.

நிதிப் பகுப்பாய்வு மற்றும் மாடலிங் டிப்ளோமா படிப்பைப் பல கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றன.

https://www.udemy.com/courses/finance-and-accounting/financial-modeling-and-analysis

https://www.ey.com/en_
iney-faas-learning-solutions/e-learning-certification-in-financial-modelling-and-valuation

### Certificate in Data Analysis and Interpretation

நிதி மற்றும் பொருளாதாரம் சார்ந்த ஏராளமான தகவல்கள் குவிந்துகிடக்கின்றன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் பல புரிதல்களும், விளக்கங்களும் காணலாம். இதற்கு பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த துறைகளை அறிந்திருக்க வேண்டும்.

தகவல் பகுப்பாய்வு செய்வதற்கும், அதிலிருந்து போதுமான விளக்கங்களை அறிவதற்கும் நிபுணத்துவம் வேண்டும். இவ்வாறு நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு தரவு ஆய்வாளர் (data analyst), சந்தை ஆராய்ச்சி ஆய்வாளர் (market research analyst) மற்றும் வணிக ஆய்வாளர் (business analyst) போன்ற பணிகள் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு: https://www.coursera.org/google-certificates/data-analytics-certificate?utm_source=google&utm_medium=institutions&utm_campaign=gwg-site-en_in-data-analytics-course

## 9.3 BA Public Administration and Political Science படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

சில கல்லூரிகளில் பொது நிர்வாக (BA - Public Administration) படிப்பும், சில அரசு கலைக்கல்லூரிகளில் அரசியல் அறிவியல் (BA - Political Sciences) பாடமும் உள்ளன.

பொதுவாக, UPSC Exam-க்கு தயார் செய்யவே இந்த கோர்ஸில் சேர்வார்கள். ஆனால், அண்மையில் தனியார் நிறுவனங்கள் அரசியல் அறிவியல் படித்தவர்களையும் கவனிக்க தொடங்கியுள்ளனர்.

### Certificate in Public Policy and Governance

அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்-திட்டங்கள், சட்டங்கள் மற்றும் நடத்தைகளே பொதுக்கொள்கை. இக்கொள்கைகளால் பொதுமக்கள் எவ்வாறு பயனடைகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியம். பொதுவாக, பொதுக்கொள்கைகளை அலசி ஆராய்ந்து ஆலோசனை சொல்பவர்களுக்கு மதிப்பு அதிகம்.

பொதுக்கொள்கைகளை அலசி ஆராயும் திறனை வளர்த்துக்கொள்பவர்களுக்கு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களிலும் கொள்கை ஆய்வாளர் (policy analyst), அரசு விவகார நிபுணர் (government affairs specialist) மற்றும் திட்ட மதிப்பீட்டாளர் (program evaluator) போன்ற பணிகள் கிடைக்கும்.

பொதுக்கொள்கை மற்றும் ஆளுகைக்கான சான்றிதழ் படிப்பை பெங்களூருவில் உள்ள தி நேஷனல் லா ஸ்கூல் ஆஃப் இந்தியா யுனிவர்சிட்டி, The National Law School of India University, Bangalore https://www.nls.ac.in வழங்குகிறது.

மேலும் மத்திய அரசின் அங்கமாக உள்ள கார்ப்பரேட் விவகார அமைச்சகம் பொதுக்கொள்கை குறித்து சான்றிதழ் படிப்பை வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு: https://iica.nic.in/Forthcoming_Programmes.aspx

### Certificate in Political Campaign Management

அரசியல் கட்சிகள் ஐந்தாண்டுக்கு ஒரு முறை சட்டமன்ற தேர்தலையும், நாடாளுமன்ற

தேர்தலையும் எதிர்கொள்கின்றன. தேர்தலின் போது கட்சியின் தேர்தல் அறிக்கைகளையும், கொள்கைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பது மிகப்பெரிய வேலை.

தேசிய கட்சிகளும், மாநில கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிக்காக, தேர்தல் உத்தியில் நிபுணத்துவம் பெற்றவர்களை அதிக அளவில் நிதி கொடுத்து குறிப்பிட்ட கால திட்டப்பணியை வழங்குகிறார்கள். உதாரணத்துக்கு, தேர்தல் உத்தியாளர் பிரசாந்த் கிஷோருக்கு அரசியல் கட்சிகள் வழங்கும் முக்கியத்துவத்தை கவனிக்கலாம்.

அரசியல் பிரச்சார மேலாண்மை நிறுவனங்களை வைத்திருப்பவர்கள் குழுக்களாக செயல்படுகிறார்கள். இக்குழுவில் பணியாற்றவும், தனிப்பட்ட வேட்பாளர்களின் பிரச்சாரங்களை ஒருங்கிணைக்கவும் அரசியல் பிரச்சார மேலாண்மை சான்றிதழ் படிப்பைப் படித்தவர்களை எளிதாக தேர்தல் பணிக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

அரசியல் பிரச்சார மேலாண்மைக்கான சான்றிதழ் படிப்பைப் பல கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றன. மேலும் விவரங்களுக்கு:

https://lp.theschoolofpolitics.com/political-campaign-electoral-strategy

https://www.iigledu.in/diploma-in-political-strategy-communications-and-planning

https://www.rgniyd.gov.in/?q=content/post-graduate-diploma-political-leadership-pgdpl

## Certificate in Election Management

IWCM

ஐந்தாண்டுக்கு ஒரு முறை திருவிழா போல் நடக்கிறது தேர்தல். இந்தத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியின் உள்ளூர் பூத் கமிட்டியில் ஆரம்பித்து மாவட்ட அளவிலான கண்காணிப்பும் மாநில அளவிலான கண்காணிப்பு என பெரிய அளவில் நெட்வொர்க் பின்னலாக உள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எவ்வளவு வாக்குகள் பதிவாகி இருக்கின்றன, ஆண்கள் எவ்வளவு பேர், பெண்கள் எவ்வளவு பேர் என ஏராளமான தரவுகள். இவற்றை எல்லாம் பகுப்பாய்வு செய்வதே மிகப்பெரிய கலை.

இதை கற்றுக் கொள்பவர்களுக்கு தன்னார்வ நிறுவனங்களிலும், சர்வதேச அளவிலான நிறுவனங்களிலும் வாய்ப்புகள் உண்டு. தேர்தல் மேலாண்மைக்கான சான்றிதழ் படிப்பை நாடாளுமன்ற கல்வி நிறுவனம் முதல் பல கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன. மேலும் விவரங்களுக்கு:

https://loksabhadocs.nic.in/ICPS

https://iplindia.org/Personalized-Election-Management-Training.php

https://www.midm.co.in/election-management-courses

## Certificate in Political Journalism

பொது நிர்வாகவியல் மற்றும் அரசியல் சார் அறிவியல் படிப்பவர்கள் இதழியல் படிப்பைப் படிக்கலாம். அரசியல் கட்சிகள் குறித்து பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்களில் என்ன மாதிரியான கருத்துகளை முன் வைக்கிறார்கள் என்பது குறித்து அறிந்துக்கொள்ளலாம்.

இதழியல் கலையைக் கற்றிருந்தால் ஊடகத்துறையில் வேலை வாய்ப்பினைப் பெறலாம். அரசியல் இதழியல் படிப்பை The Indian Institute of Journalism and New Media https://www.iijnm.org என்ற அமைப்பு வழங்குகிறது. இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் இதழியல் பட்டயப்படிப்பை வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு:

https://www.mcu.ac.in/p-g-diploma-in-political-communication-pgdpc

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sojnms/programmes/detail/691/2

## Diploma in International Relations

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் நல்லுறவை பேணும். சில நேரங்களில் முரண்படும். இதன் மூலம் குறிப்பிட்ட நாட்டின் வர்த்தக வாய்ப்புகள் அதிகரிக்கவும், குறையவும் வாய்ப்புள்ளது. இதனால் சர்வதேச உறவுகள் குறித்த படிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்தப் படிப்பை The Jindal School of International Affairs https://jgu.edu.in/jsia/ கல்வி நிறுவனம் வழங்குகிறது.

https://www.iigledu.in/diploma-in-international-affairs-and-diplomacy

## Diploma in Environmental Law and Policy

நாளுக்கு நாள் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. அரசு சுற்றுச்சூழல் குறித்து என்னென்ன கொள்கைகளை பின்பற்றுகின்றன என்பதில் ஆரம்பித்து புதிய திட்டங்களை செயல்படுத்தும் போது சுற்றுச்சூழல் கொள்கைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பது வரை கவனிக்கப்படுகிறது.

IWCM

சுற்றுச்சூழல் குறித்து என்னென்ன சட்டங்களும், கொள்கைகளும் உள்ளன என்பதை அறிந்து அதில் நிபுணத்துவம் பெறுபவர்களுக்கு வேலை வாய்ப்பு சந்தையில் தனி மதிப்பு உள்ளது.

அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கொள்கை சார்ந்த டிப்ளோமா படிப்பை தி நேஷனல் லா ஸ்கூல் ஆஃப் இந்தியா யுனிவர்சிட்டி The National Law School of India University https://www.nls.ac.in கல்வி நிறுவனம் வழங்குகிறது.

https://www.wwfindia.org/about_wwf/enablers/cel/tcapbuilding/pgdelp

http://www.ignou.ac.in/index.php?q=ignou/aboutignou/school/sol/programmes/detail/394/2

## Diploma in Rural Development

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு ஊரக வளர்ச்சிக்காக பல ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்கிறது. இவை முறையாக வளர்ச்சி பணிக்கு பயன்படுத்தப்படுகிறதா, ஊரக வளர்ச்சி பணிகள் எந்த அளவில் நடக்கின்றன என்பதை எல்லாம் அறிந்துக்கொள்ள வேண்டும்.

இது குறித்த படிப்புத் தான் டிப்ளோமா ஊரக வளர்ச்சி. இந்த படிப்பை முடிப்பவர்களுக்கு ஊரக வளர்ச்சி அதிகாரி (rural development officer), திட்ட மேலாளர் (project manager) மற்றும் சமூக மேம்பாட்டு நிபுணர் (community development specialist) போன்ற பணிகள் கிடைக்கும்.

டிப்ளோமா ஊரக வளர்ச்சி படிப்பை இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் (The Indira Gandhi National Open University) நடத்துகிறது.

மேலும் விவரங்களுக்கு:

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soce/programmes/detail/236/2

https://iisdt.in/product/post-graduate-diploma-in-rural-management-pgdrm

http://nirdpr.org.in/pgdrdm.aspx

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soce/programmes/detail/237/2

## BA Economics, Public Administration, Political Science படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

பொருளியல், பொது நிர்வாகம் மற்றும் அரசியல் சார் அறிவியல் போன்ற கலை சார்ந்த பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு, தங்களுடைய படிப்பைத் தாண்டி நிறைய நேரம் இருக்கும். இந்த நேரத்தில் கூடுதலாக கம்ப்யூட்டர் சார்ந்த மென்பொருள்களை கற்றுக்கொண்டால் வேலை வாய்ப்பில் முன்னுரிமைப் பெறலாம்.

IWCM

**Stata:** பொருளாதாரம் மற்றும் பிற சமூக அறிவியலில் பரவலாகப் பயன்படுத்தப்படும் புள்ளிவிவர பகுப்பாய்வு மென்பொருள்.

**R:** புள்ளியியல் கணினி மற்றும் வரைகலைக்கான நிரலாக்க மொழி (programming language) மற்றும் மென்பொருள்.

**SAS:** தரவு மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் புள்ளிவிவர மென்பொருள்.

**Tableau:** தரவு காட்சிப்படுத்தல் (data visualization) மற்றும் வணிக நுண்ணறிவு மென்பொருள் (business intelligence software).

மேற்கண்ட மென்பொருள்களைப் படித்துக் கற்றுக்கொண்டால், தரவு ஆய்வாளர் (data analyst), ஆராய்ச்சியாளர் (research associate), மற்றும் பொருளாதார அளவீட்டாளர் (econometrician) போன்ற வாய்ப்புகள் கிடைக்கும்.

இணையதளங்கள்: https://www.stata.com

https://www.r-project.org

https://www.sas.com/en_us/home.html

https://www.tableau.com

**SPSS:** புள்ளியியல் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருள்.

இந்த மென்பொருளைக் கற்றுக்கொள்பவர்களுக்கு தரவு ஆய்வாளர் (data analyst), ஆராய்ச்சி ஆய்வாளர் (research analyst) மற்றும் சந்தை ஆய்வாளர் (market researcher) போன்ற வாய்ப்புகள் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு:

https://www.ibm.com/training/course/statistical-analysis-using-ibm-spss-statistics-v25-0G51AG

https://www.cromacampus.com/courses/online-spss-training-in-india

**Excel:** தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் மைக்ரோசாப்ட் ஆப்.

எக்ஸ்எல்-ஐ நன்கு கற்றுக்கொண்டால் நிதி ஆய்வாளர் (financial analyst), தரவு ஆய்வாளர் (data analyst) மற்றும் சந்தை ஆய்வாளர் (market researcher) போன்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு:

https://support.microsoft.com/en-us/office/excel-video-training-9bc05390-e94c-46af-a5b3-d7c22f6990bb

IWCM

**Geographic Information Systems (GIS)**

புவியியல் தகவல் அமைப்புகள் (GIS) குறித்த மென்பொருளை நன்கு கற்றுக்கொண்டால் பல துறைகளில் ஜிஐஎஸ் ஆய்வாளர் (GIS analyst), திட்டமிடுபவர் (urban planner) மற்றும் கார்ட்டோகிராபர் (cartographer) போன்ற பணிகள் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு: https://research.lib.buffalo.edu/gis-courses/gis-training

https://www.esri.com/training/catalog/57630434851d31e02a43ef28/getting-started-with-gis

https://onlinecourses.nptel.ac.in/noc22_ce26/preview

## 9.4 BA History படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

பெரும்பாலானோர் வரலாற்று பாடம் எடுத்து படித்தால் வேலை கிடைக்குமா என்ற ஏளனத்தோடு பார்ப்பவர்கள் உண்டு. உண்மையில், BA History படித்தாலும், சில தகுதிகளை வளர்த்து கொண்டால் போட்டித் தேர்வுகளில் நிச்சயம் வெற்றி பெறலாம்.

மனிதன் தோன்றி இவ்வளவு பெரிய சமூகமாக மாறியதன் வரலாற்றை இன்றும் பல அகழ்வாய்வுகளிலிருந்து புதிது புதிதாகக் கற்றுக்கொண்டே இருக்கிறோம். இதற்கு உதாரணமாக, கீழடி ஆய்வுகளைச் சொல்லலாம். அண்மை ஆய்வுகள் தொல்லியல் துறையில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி வருகிறது.



## Diploma in Archaeology

இந்திய தொல்லியல் கழகம் (The Indian Archaeological Society – http://www.indiarchaeology.org மற்றும் தொல்லியல் நிறுவனம் the Institute of Archaeology https://asi.nic.in இணைந்து நடத்தும் டிப்ளோமா தொல்லியல் படிப்பை தேர்ந்தெடுக்கலாம்.

மேற்கண்ட படிப்பை முடிப்பவர்களுக்கு தொல்பொருள் களப்பணி (Archaeological fieldwork), கலாச்சார வள மேலாண்மை (cultural resource management) பொறுப்பாளர் மற்றும் அருங்காட்சியகக் கண்காணிப்பாளர் (museum curation) போன்ற பணிகள் கிடைக்கும்.

## Certificate in Museum Studies

தேசிய அருங்காட்சியக நிறுவனம் The National Museum Institute http://nmi.gov.in மற்றும் தேசிய அறிவியல் அருங்காட்சியகங்கள் கவுன்சில் National Council of Science Museums http://ncsm.gov.in இணைந்து அருங்காட்சியக ஆய்வு சான்றிதழ் படிப்பை வழங்குகிறது. இந்த படிப்பை முடிப்பவர்களுக்கு அருங்காட்சியகக் கண்காணிப்பாளர் மற்றும் அருங்காட்சியக நிர்வாகப் பணிகளும் கிடைக்கும்.

## Diploma in Heritage Management

வரலாற்று சிறப்பு மிக்க இடங்களையும், பாரம்பரிய தளங்களையும் பாதுகாப்பதும் பராமரிப்பதும் மிகவும் அவசியம். இதில் நிபுணத்துவம் பெறுகிறவர்கள் பாரம்பரிய தள மேலாண்மை (Heritage site management), பாதுகாப்பு (conservation) மற்றும் சுற்றுலா மேம்பாடு (tourism development) போன்ற பிரிவுகளில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

மேற்கண்ட படிப்பை The Indian Heritage Cities Network Foundation http://ihcn.in என்ற அமைப்பு நடத்துகிறது.

### Diploma in Archival Studies

இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (The National Archives of India http://nationalarchives.nic.in) மற்றும் காப்பகங்களுக்கான சர்வதேச கவுன்சில் (International Council on Archives - https://www.ica.org/en/our-professional-programme அமைப்பும் இணைந்து ஆவணக் காப்பக டிப்ளோமா படிப்பை வழங்குகிறது. இந்த டிப்ளோமா படிப்பை முடிப்பவர்களுக்கு அரசு நிறுவனங்கள் மற்றும் கலாச்சார நிறுவனங்களில் காப்பக பதவிகள் கிடைக்கும்.

### Diploma in Historical Tourism

இந்தியாவுக்கு சுற்றுலா பயணிகளாக வருகைத்தரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இவர்களுக்கு சுற்றுலாத்தளத்தின் வரலாற்று பின்னணியை விளக்குவதற்கு போதுமான ஆட்கள் இல்லை.

இத்தகைய குறையை நிவர்த்தி செய்ய டிப்ளோமா இன் ஹிஸ்டாரிக்கல் டூரிசம் என்ற படிப்பை அறிமுகப்படுத்தி உள்ளது இந்திய சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை நிறுவனம் (The Indian Institute of Tourism and Travel Management https://www.iittm.ac.in).

ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் சுற்றுலா மேலாண்மை துறை (Department of History and Tourism Management, Central University of Rajasthan https://www.curaj.ac.in) இணைந்து பட்டயப்படிப்பை அறிமுகப்படுத்தி உள்ளது.

IWCM

இந்தப் படிப்பைப் படித்துமுடித்தால் சுற்றுலா துறையில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

## 9.5 BA English Literature படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

### Diploma in Journalism and Mass Communication

கலைப் பிரிவில் ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் படிப்பவர்கள், டிப்ளோமா இன் ஜர்னலிஸம் அண்ட் மாஸ் கம்ப்யூனிகேஷன் (Diploma in Journalism and Mass Communication) படிக்கலாம்.

நாளிதழ்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள், ஆன்லைன் செய்தித் தளங்கள் மற்றும் இதர ஊடகம் சார்ந்த மற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு:

The Indian Institute of Mass Communication: http://iimc.nic.in

IGNOU: http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sojnms/programmes/detail/691/2

### Certificate in Content Writing/Script Writing

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் (Content Writer) தேவை அதிகரித்திருக்கிறது. இணையத்துக்குத் தேவையான தகவலை எழுதுவது, சமூக வலை தளங்களுக்குத் தகுந்த தகவலை வடிவமைப்பது என நுணுக்கமான எழுத்துகளுக்குச் சொந்தக்காரர்களாகி வேலை வாய்ப்பைப் பெறலாம்.



IWCM

மேலும், தற்போது இணைய வழியே திரைப்படங்களும், வெப் தொடர்களும் அதிகளவில் வெளிவரத் தொடங்கி இருப்பதால் Script Writer களுக்கான தேவை அதிகரித்துள்ளது.

## Technical Writing Certification

தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள தொழில்நுட்ப விஷயங்களை வெகுஜன மக்கள் புரிந்துக்கொள்ளவும், தொழில்நுட்ப நிறுவனங்களை வாடிக்கையாளர்கள் புரிந்துக்கொள்ளவும் மாற்றி எழுதுவதும் அவசியம்.

இதற்கான வழிமுறைகளைச் சொல்லிக்கொடுக்கிறது தொழில்நுட்ப சான்றிதழ் படிப்பு.

இந்த படிப்பை முடிப்பவர்களுக்கு Technical writers, content developers, மற்றும் instructional designers போன்ற பணிகள் கிடைக்கும்.

தொழில்நுட்ப சான்றிதழ் படிப்பை Udemy (https://www.udemy.com/topic/technical-writing) மற்றும் Simplilearn (https://www.simplilearn.com/technical-writing-certification-training-course) போன்ற கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றன.

## Creative Writing Certification

எப்போதும் வழக்கமாக எழுதுவதை விட, திட்ட அறிக்கைக்கு, விளம்பரங்களுக்கு என அதற்குரிய நடையில் எழுதுவது பெரிய கலை. அதை சொல்லிக்கொடுக்கிறது கிரியேட்டிவ் ரைட்டிங் படிப்பு.

இந்தப் படிப்பை முடிப்பவர்கள் விளம்பரம் தயாரிப்பு, நிறுவனங்களின் தொடர்பியல் துறையிலும் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

கிரியேட்டிவ் ரைட்டிங் படிப்பினை பிரிட்டிஷ் கவுன்சில் https://www.britishcouncil.in/english/courses-adults/creative-writing-diploma மற்றும் IGNOU போன்ற கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன.

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soh/programmes/detail/134/2

## Foreign Language Certification

வெளிநாட்டு மொழியையும், அதன் கலாச்சாரத்தை சொல்லி கொடுப்பதற்கு என பல கல்வி நிறுவனங்கள் உள்ளன.

வெளிநாட்டு மொழியையும், கலாச்சாரத்தையும் எப்படி சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பதில் நிபுணத்துவம் பெற வைக்கிறது வெளிநாட்டு மொழிசான்றிதழ் படிப்பு. மேற்கண்ட படிப்பின் மூலம், மொழிப்பெயர்ப்பாளர் மற்றும் மொழி ஆசிரியர் பணிகள் கிடைக்கும்.

சென்னையில் உள்ள பிரெஞ்சு கலாச்சார மையத்திலும், ஜெர்மன் கல்வி மையத்திலும் இந்த படிப்பு உள்ளது. மேலும் விவரங்களுக்கு: The Alliance Franaise (https://www.afindia.org/learn-french), மற்றும் the Goethe-Institute (https://www.goethe.de/ins/in/en/sta/che.html) நடத்துகிறது.

## Teaching English as a Foreign Language (TOEFL) Certification

ஆங்கிலத்தை கற்றுக்கொண்டாலும் அதை எப்படி மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பது என்பது ஒரு விதமான கலை. அந்த கலையை கற்றுக்கொடுக்கிறது ஆங்கிலத்தை ஒரு வெளிநாட்டு மொழியாகக் கற்பித்தல் (TOEFL) படிப்பு.

மேலும் விவரங்களுக்கு:

International TOEFL Academy (https://www.internationalteflacademy.com)

BridgeTOEFL (https://bridge.edu/tefl/courses/tefl-certification)

TOEFL (https://www.tefl.org/courses/tesol-certification)

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soh/programmes/detail/136/2

## Copy Editing Certification

ஆங்கிலத்தில் எழுதும் போது ஏற்படும் பிழைகளை சரி செய்வதும், மாற்றி எழுதுவதும் ஒரு கலை. மேற்கண்ட விஷயங்களில் கவனம் செலுத்தினாலும் copy editors, proof readers, and content reviewers போன்ற வேலை வாய்ப்பைப் பெறலாம். மேலும் விவரங்களுக்கு:

http://rcchandigarh.ignou.ac.in/programmes/detail/414/2

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soh/programmes/detail/133/2

## Stenographer Secretarial Assistant (English)

நிறுவனங்களில் உயர் பொறுப்பில் இருப்பவர்கள் தனக்கு கீழே உள்ள செயலர்களிடம் நிறுவனத்துக்கு தேவையான கடிதங்களை தயார் செய்ய சொல்வது வழக்கம். இதற்காக செயலர்களாக சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு தெரிந்தவர்களை வேலைக்கு

நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நிறைய சம்பளமும் நிர்வாகப்பணிகளை கவனிக்கும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசு நிறுவனங்களில் இதற்கான தனி பிரிவே உள்ளது. இந்தப் பிரிவில் பணியாற்றுவதற்கென தனியே தேர்வும் நடத்தப்படுகிறது. சுருக்கெழுத்து மற்றும் நிர்வாகத்துக்கு தேவையான செயலகப் பணிகளை சொல்லிக்கொடுக்கவே நிறைய நிறுவனங்கள் உள்ளன. தற்போது தமிழகத்தில் உள்ள பல அரசு தொழில்துறை பயிற்சி நிறுவனம் மற்றும் ஸ்டெனோகிராபர்ஸ் திறன் பயிற்சி நிறுவனங்களில் தனி படிப்பே உள்ளது.

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sovet/programmes/detail/693/2

### BA English Literature படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

Grammarly, Hemingway Editor என்ற இரண்டு செயலிகளை கற்றுக்கொண்டால் content writing, copywriting, and editing போன்ற பணி செய்வது எளிது.

Website: https://www.grammarly.com

Website: https://hemingwayapp.com

Website: https://wordpress.com

Microsoft Office தொகுப்பில் Word, Excel, and PowerPoint என மூன்று செயலிகளை கற்றுக்கொண்டால் அலுவலகப் பணியைச் சிறப்பாகச் செய்யலாம்.

Website: https://www.microsoft.com/en-in/microsoft-365/office-365

IWCM

### 9.6 BA Tamil Literature படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

**பி**.ஏ. தமிழ் படிப்பவர்களுக்கு ஏதேனும் படிப்பு இருக்கிறதா, கூடுதலாக என்ன படித்தால் வேலை கிடைக்கும் என்று கேட்பவர்களும் உண்டு. நிச்சயம் தமிழ் இலக்கியம் எடுத்துப் படிப்பவர்கள் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளுக்கு முன்கூட்டியே தயாராகலாம். பட்டப்படிப்பு படிக்கும் போது கீழ்கண்ட கூடுதல் படிப்புகளில் கவனம் செலுத்தலாம்.

#### Diploma in Tamil Journalism and Mass Communication

தற்போது, ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையின் வளர்ச்சி அபரிதமாக உள்ளது. இந்த வளர்ச்சியில் தமிழ் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கான வாய்ப்பு அதிகம். உதாரணத்துக்கு, திரைப்படத்துறை, தகவல் துறையின் நீட்சியால், சினிமா தியேட்டர்களை நம்பி இல்லாமல், இணையம் சார்ந்த ஓடிடி போன்ற திரைப்பட வெளியீட்டு தளங்களை நோக்கி நகர்ந்துள்ளன.

இணையத்தில் வெப் சீரிஸ்கள் பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றன. இதனால், வெப்சீரிஸ் போன்ற இணையத்தொடர்களில் பணியாற்ற வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இதழியல் படிப்பு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகத்திலும் உள்ளன. மேலும் விவரங்களுக்கு:

https://www.tnou.ac.in/programmes/diploma-in-tamil-journalism-and-mass-communication



## Diploma in Tamil Language and Translation

பிற மொழிகளில் உள்ள தகவல்களை கருத்து மாறாமல் அப்படியே தமிழில் மொழி பெயர்ப்பதும், தமிழில் உள்ளதை பிறமொழிகளுக்கு மொழிப்பெயர்ப்பதும் தனிக்கலை.

இக்கலையில் நிபுணத்துவம் பெறுபவர்களுக்கு பல்வேறு துறைகளில் மொழிப்பெயர்ப்பாளர் பணி வாய்ப்பு எளிதாக கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு: http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sotst/programmes/detail/247/2

## Certificate Course in Tamil Script Writing

தமிழ் கட்டுரை வடிவம், உரைநடை வடிவம் என்பது போல தொலைக்காட்சி தொடருக்கும், திரைப்படங்களுக்கு என தனி நடையில் எழுதுவது அவசியம். இத்தகைய கலையை கற்றுக்கொண்டு திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள், வெப் தொடர்கள் போன்ற பலவிதமான வாய்ப்புகளைப் பெறலாம். பல தனியார் நிறுவனங்கள் இதற்கான பயிற்சியை வழங்குகின்றன.

## Diploma in Tamil Literature and Film Studies

தமிழ் இலக்கியமும் திரைப்படங்களும் என்ற பட்டயப்படிப்பில் திரைப்படங்களில் எப்படி தமிழ் இலக்கியங்கள் பயன்படுகின்றன, தமிழ் திரைப்படங்களின் விமர்சன பார்வை, எப்படி ஒரு திரைப்படத்தை அணுகுவது என பல விஷயங்கள்

கற்றுக்கொடுக்கப்படுகிறது. மேற்கண்ட படிப்பு தமிழ்நாடு திறந்த நிலைப்பல்கலைக்கழகத்தில் உள்ளது.

மேலும் விவரங்களுக்கு: https://www.tnou.ac.in/programmes/diploma-in-tamil-literature-and-film-studies

### தமிழ் தட்டச்சும் வேலை வாய்ப்பும்

தமிழ் பட்டப்படிப்பில் சேர்பவர்கள் குறைந்தபட்சம் தமிழ் தட்டச்சு கற்றுக்கொள்ள வேண்டும். ஸ்டெனோகிராபர் பயிற்சி பெற்றிருந்தால் அரசு வேலைகளில் எளிதாக நுழையலாம். கீழ்கண்ட கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களைக் கற்றுக்கொண்டாலும் வேலை வாய்ப்பில் உதவும்.

### Tamil OCR & Tamil OCR Text Scanner

Website: https://www.i2ocr.com/free-online-tamil-ocr

### Tamil Unicode Converter

https://www.tamilvu.org/en/Tamil-Keyboard-interfaces-fonts

### Tamil Typing Master and Tamil Keyboard

Website: https://www.typingmaster.com

https://www.lexilogos.com/keyboard/tamil.htm

IWCM

## 9.7 BSc Visual Communication படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

**வி**சுவல் கம்யூனிகேஷன் படிப்பு என்பது படைப்பாற்றல் சார்ந்த படிப்பு. உங்களுடைய படைப்பாற்றலை பட்டைத் தீட்ட இன்னும் கூடுதல் படிப்புகளைப் படித்தால் வேலை வாய்ப்பில் அதிக சம்பளத்தைப் பெறலாம்.

### Diploma in Graphic Design

நல்ல கிராஃபிக் வடிவமைப்பு ஒரு வணிகத்திற்கு கூடுதல் மதிப்பை வழங்குகிறது. மேலும் விற்பனையை அதிகரிக்கவும் வழிவகுக்கிறது. நல்ல வடிவமைப்புள்ள காட்சிகள், மக்களின் பார்வையைத் தூண்டுகிறது. இது கிராஃபிக் டிசைன் மீது மதிப்பை அதிகமாக்கி உள்ளது.


கிராஃபிக் டிசைனை நன்கு கற்றுக்கொள்பவர்களுக்கு கிராஃபிக் டிசைனர் (Graphic Designer), வெப் டிசைனர் (Web Designer), யுஐ டிசைனர்(UI Designer), பிராண்டிங் டிசைனர் (Branding Designer) போன்ற பல வாய்ப்புகள் உள்ளன. கிராஃபிக் டிசைன் குறித்து பல நிறுவனங்கள் பயிற்சி வழங்குகின்றன.

https://iisdt.in/product/diploma-in-graphic-designing

### Certificate in Photography

விசுவல் கம்யூனிக்கேஷன் படிப்பவர்கள் குறைந்தப்பட்சம் போட்டோகிராபி மற்றும் வீடியோகிராபி தொழில்நுட்பத்தை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் பட்டப்படிப்பு படிக்கும் போது போட்டோகிராபி கற்றுக்கொள்ள அருகில்



உள்ள போட்டோகிராபி நிறுவனத்தில் சேர்ந்து குறிப்பிட்ட காலம் பணியாற்றி தொழில்நுட்பத்தை முழுமையாகக் கற்றுக்கொள்ளலாம்.

போட்டோகிராபர், போட்டோ ஜர்னலிஸ்ட், பேஷன் போட்டோகிராபர், வைல்ட்லைப் போட்டோகிராபர் (Wildlife Photographer) போன்ற வாய்ப்புகள் உள்ளன. சினிமாவில் பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் பெறலாம். மேலும் விவரங்களுக்கு:

https://iisdt.in/product/diploma-in-photography

## Certificate in Motion Graphics

தொலைக்காட்சியில் விளம்பரத்தை பார்த்திருப்பீர்கள். வட இந்தியாவில் ஒரு பொருள் விற்பனைக்கு தென்னிந்தியா மொழிகளில் அற்புதமான காட்சிப்படுத்தி இருப்பார்கள். உண்மையில் இது மோஷன் கிராபிக்ஸ் வேலை தான். குரல் பதிவை மாற்றுவதன் மூலம் பல மொழிகளில் வீடியோ உள்ளடக்கத்தை மாற்றுகிறது. இன்டர்நெட் யுகத்தில் இருப்பதால் உங்களுடைய வீடியோக்களை உலகம் முழுவதும் பார்வையிடச் செய்யலாம்.

மோஷன் கிராபிக்ஸை கற்றுக்கொண்டால் Motion Graphic Designer, Video Editor, Animator, Visual Effects Artist போன்ற பல பணிகள் காத்திருக்கிறது. மேலும் விவரங்களுக்கு: https://www.maacindia.com மற்றும் https://frameboxx.in

## Certificate in User Experience Design (UX)

ஒரு பொருளை உருவாக்கும் போது அந்த பொருள் பயன்படுத்துகிறவர்களுக்கு எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கும் என்பதை மனதில் வைத்தே தயாரிக்க வேண்டி இருக்கிறது. இதைப் போலவே, இணையப் பக்கங்களையும், இதர

வடிவமைப்புகளையும் மேற்கொள்ளும் போது பயன்பாட்டாளர்களின் பயன்பாட்டையும் மனதில் கொள்ள வேண்டி உள்ளது. இதற்கான படிப்புடன் வடிவமைப்பையும் முழுமையாக அறிந்தால் UX Designer, UI Designer, Interaction Designer போன்ற பணிகள் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு:

https://grow.google/intl/en_in/ux-design-course

## Certificate in Web Design and Development


விஷுவல் கம்யூனிக்கேஷன் படிப்பவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இவ்வாறு ஆர்வமிருப்பவர்கள் வெப் டிசைன் அண்ட் டெவலப்மென்ட்டில் கவனம் செலுத்தலாம். இதற்காக, கூடுதலாக வெப் டிசைன் தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொண்டால், Web Developer, UI Designer, UX Designer, Front-end Developer போன்ற பல பணி வாய்ப்புகளைப் பெறலாம்.

## Diploma in Audio Engineering

தொழில்நுட்ப வளர்ச்சியால் ஆடியோ மற்றும் காணொளிகளின் பங்களிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆடியோ குறித்துப் படிக்க சவுண்ட் இன்ஜினியரிங் படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம். குறிப்பாக, பி.எஸ்சி விஸ்வல் கம்யூனிகேஷன் மற்றும் இயற்பியல் பட்டப்படிப்பு படித்தவர்கள், மேற்கொண்டு பட்டயப்படிப்பாக, சவுண்ட் இன்ஜினிரியங் படித்தால் ஆடியோ தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களில் ஸ்டுடியோ சவுண்ட் இன்ஜினியர், ஆடியோ இன்ஜினியர், ஆடியோ எடிட்டர், ஆடியோ மேனேஜர் போன்ற வேலை வாய்ப்பைப் பெறலாம்.

IWCM

http://rcchennai.ignou.ac.in/programmes/detail/539/2



## BSc Visual Communication படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

**த**ற்போது சமூக ஊடகங்களின் பங்களிப்பும், பயன்படுத்துவதும் அதிகரித்து வருகிறது. சமூக ஊடகத்துக்கு தகுந்தாற்போல் வடிவமைப்புகளை உருவாக்க Canva என்ற மென்பொருளைக் கற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் கிராஃபிக் வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் பிரிவில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

இணையதளம்: https://www.canva.com

நீண்ட காலமாக வடிவமைப்பு துறையில் சிறந்த மென்பொருளாக விளங்குகிறது Adobe Photoshop இதன் மேம்பட்ட வகையில் பல பயன்பாடுகளையும் உள்ளடக்கிய வகையில் உள்ளது அடோப் Adobe Creative Cloud, இதில் Photoshop, indesign மற்றும் Illustrator உள்ளிட்ட பல ஆஃப்களை உள்ளடக்கியதாக உள்ளது.

இந்த ஆஃப்களை முழுமையாகக் கற்றுக்கொண்டால் நிச்சயம் தொழில்முறை வரைகலை வடிவமைப்பாளராக மாறலாம். வேலை வாய்ப்புகளுக்கும் பஞ்சமில்லை.

இணையதளம்: https://www.adobe.com/creativecloud.html

பல தொழில் வல்லுநர்களால் பயன்படுத்தப்படும் வீடியோ எடிட்டிங் மென்பொருள் Avid Media Composer. இந்த மென்பொருளை கற்றுக்கொண்டால் வீடியோ எடிட்டிங் பிரிவில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.


IWCM

இணையதளம்: https://www.avid.com/media-composer

### வேலை வாய்ப்பை உறுதிபடுத்தும் அப்ளிகேஷன்கள்

- Blender - https://www.blender.org
- Cinema 4D - https://www.maxon.net/en/cinema-4d
- Procreate - https://procreate.art
- CorelDRAW Graphics Suite - https://www.coreldraw.com/en
- Autodesk 3ds Max - https://www.autodesk.in/products/3ds-max/overview
- Final Cut Pro - https://www.apple.com/final-cut-pro
- Unity - https://unity.com

10




# கணிதம் மற்றும் கணினி அறிவியல் படிப்புகள்

IWCM

## 10.1 BSc Computer Science, BCA படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

**பி**.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ், பிசிஏ., கணிதம், புள்ளியியல் படிப்பவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலை வாய்ப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. மேற்கண்ட பிரிவுகளில் படிப்பவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் நுழைவதற்கு பட்டப்படிப்பு படிக்கும் போதே தயாராக சில கூடுதல் படிப்புகளில் கவனம் செலுத்தலாம்.

பிசிஏ, கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பவர்கள் மட்டுமல்லாது மற்ற பட்டப்படிப்பு படித்தவர்களும் Web Development குறித்த படிப்பைக் கற்றுக்கொள்ளலாம். இதில், ஹெச்டிஎம்எல்(HTML), சிஎஸ்எஸ் (CSS), ஜாவா ஸ்கிரிப்ட் (Java Script), பிஹெச்பி(PHP) என இணைய மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம். இதை ஆழ்ந்து கற்றுக்கொள்வதன் மூலம் வேலை வாய்ப்பு சந்தையில் சாதிக்க பெரிய அளவில் உதவும்.

### Data Science and Machine Learning

வேலை வாய்ப்புகள்: Data Analyst, Machine Learning Engineer, Data Scientist

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Indian Institute of Technology (IIT), Indian School of Business (ISB), and Simplilearn, Great Learning, Jigsaw Academy, and IIT Bangalore.

https://www.iitm.ac.in/the-institute/ai-and-data-sciences

## Cloud Computing

வேலை வாய்ப்புகள்: Cloud Engineer, Cloud Architect, Cloud Developer

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Simplilearn, IBM Skills Academy, AWS Academy, Udacity, and Edureka.

https://cloud.google.com/learn/training?hl=en

## Cybersecurity

வேலை வாய்ப்புகள்: Cybersecurity Analyst, Security Consultant, Network Security Engineer

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: SANS Institute, EC-Council, and Cybrary.

**BSc Computer Science, BCA, BSc Maths, Statistics படிப்பவர்கள் Data Science and Analytics படிப்பில் சேர்ந்து படிக்கலாம். இந்த படிப்பில், தகவல் பகுப்பாய்வு, தகவலின் அடிப்படையில் செயல் திட்டமிடல், முன்கணிப்பிடல் என பலவற்றையும் கற்றுக்கொள்ளலாம்.**

**தற்போது வணிக நிறுவனங்கள் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முடிவெடுப்பதும், டேட்டா அனாலிட்டிக்ஸை பயன்படுத்துவதும் அதிகரித்திருப்பதால் இந்த படிப்பை முடித்திருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.**

https://grow.google/certificates/cybersecurity

https://learndigital.withgoogle.com/digitalgarage/course/intro-to-cybersecurity-for-business

IWCM

## Web Development

வேலை வாய்ப்புகள்: Front-end Developer, Back-end Developer, Full Stack Developer

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Udacity, Codecademy, and FreeCodeCamp, Udemy, Coursera, and edX.

https://www.udacity.com/course/front-end-web-developer-nanodegree--nd0011

## Mobile App Development

வேலை வாய்ப்புகள்: Mobile App Developer, Mobile Application Architect, Mobile Development Engineer, Mobile App Tester, and Mobile App Designer.

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Udacity, Pluralsight, Google Developers Training, and Udemy and Coursera. http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/socis/programmes/detail/710/2

## Digital Marketing

வேலை வாய்ப்புகள்: digital marketer, social media manager, and SEO analyst.

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Simplilearn, Udacity, and HubSpot.

https://learndigital.withgoogle.com/digitalgarage/course/digital-marketing

https://grow.google/certificates/digital-marketing-ecommerce/#?modal_active=none



பொருளடக்கம்



IWCM

## Blockchain

வேலை வாய்ப்புகள்: Blockchain Developer, Blockchain Architect, Blockchain Analyst

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Blockchain Council, Udacity, Simplilearn, IBM Skills Academy, and edX

## Artificial Intelligence

வேலை வாய்ப்புகள்: AI Developer, AI Researcher, Machine Learning Engineer and Data Scientist.

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Indian Institute of Technology (IIT), edX, Simplilearn, Udacity, and Coursera.

## Game Development

வேலை வாய்ப்புகள்: game developer, game designer, and game artist.

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Unity Technologies, Udemy, and Unreal Engine. https://learn.unity.com

## Internet of Things (IoT)

வேலை வாய்ப்புகள்: IoT developer, IoT architect, and IoT consultant.

படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்: Internet of Things Certification Institute (IoTCI), Simplilearn, IBM Skills Academy, and Coursera.

Website: https://www.nielit.gov.in/calicut/content/certificate-course-internet-things

## BSc Computer Science & BCA படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

**Java:** ஜாவா என்பது இணையம், மொபைல் மற்றும் நிறுவனச் சூழல்களுக்கு ஏற்றற்போல கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்களை உருவாக்கப் பயன்படும் ஒரு பிரபலமான நிரலாக்க மொழி. இந்த மொழியை நன்கு கற்றுக்கொண்டு மொபைல் மற்றும் இணைய அப்ளிகேஷன்களை உருவாக்கி நிபுணத்துவம் பெறும் போது வேலை வாய்ப்பும் எளிதாக கிடைக்கும்.

சுற்றுச்சூழல் அறிவியல் டிப்ளோமா/சான்றிதழ் படிப்பில் சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியின் மூலம், சுற்றுச்சூழல் ஆலோசனை நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். மேலும் விவரங்களுக்கு:

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sos/programmes/detail/168/2

### Intellectual Property Rights

அறிவுசார் சொத்துரிமைகள் டிப்ளோமா/சான்றிதழ் பயிற்சியில் காப்புரிமைச் சட்டங்கள், வர்த்தக சின்னங்கள், பதிப்புரிமைகள் மற்றும் அறிவுசார் சொத்துக்களின் பிற வடிவங்கள் குறித்தும் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம் பயோடெக் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு:

IWCM

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sol/programmes/detail/249/2

### Diploma in Drug Regulatory Affairs

மருந்து ஒழுங்குமுறை விவகாரங்கள் டிப்ளோமா படிப்பில் மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு குறித்து கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்தப் படிப்பை முடிப்பவர்கள் மருந்துத் துறை அல்லது அரசு நிறுவனங்களில் ஒழுங்குமுறை விவகாரத் துறைகளில் பணியாற்றலாம்.

மேலும் விவரங்களுக்கு: https://actrec.gov.in/health-science

## BSc Biochemistry படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

**PyMOL** – ஒரு சக்திவாய்ந்த மூலக்கூறு காட்சிப்படுத்தல் மென்பொருள்.

இது புரதங்கள் மற்றும் பிற உயிர் மூலக்கூறுகளின் உயர்தர படங்களை உருவாக்க பயன்படுகிறது.

இந்த மென்பொருள் மருந்து கண்டுபிடிப்பு, புரத பொறியியல் மற்றும் கட்டமைப்பு உயிரியல் ஆராய்ச்சி ஆகியவற்றில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://pymol.org

BLAST – வரிசைகளின் தரவுத்தளத்திற்கு எதிராக டிஎன்ஏ மற்றும் புரத வரிசைகளைத் தேடி சீரமைப்பதற்கான ஒரு மென்பொருள்.

இந்த மென்பொருள் பயோ இன்ஃபர்மேடிக்ஸ் ஆராய்ச்சியில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் மரபணு வரிசைகளை சிறுகுறிப்பு செய்வதற்கு அவசியமானது.

இணைய முகவரி: https://blast.ncbi.nlm.nih.gov/Blast.cgi

R – புள்ளியியல் கணினி நிரலாக்க மொழி. இந்த மென்பொருள் பயோ இன்ஃபர்மேடிக்ஸ், ஜீனோமிக்ஸ் மற்றும் புரோட்டியோமிக்ஸ் ஆராய்ச்சியில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.r-project.org

Geneious – டிஎன்ஏ, ஆர்என்ஏ மற்றும் புரோட்டீன் வரிசைகளை பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தக்கூடிய மென்பொருள் தளம்.

இந்த மென்பொருள் மூலக்கூறு உயிரியல் ஆராய்ச்சி, மருந்து கண்டுபிடிப்பு மற்றும் நுண்ணுயிரியல் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.geneious.com

CLC Genomics Workbench – மரபணு தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் காட்சிப்படுத்துவதற்குமான மென்பொருள்.

இந்த மென்பொருள் மரபணு வெளிப்பாடு பகுப்பாய்வு, SNP கண்டறிதல் மற்றும் மெட்டஜீனோமிக்ஸ் உள்ளிட்ட மரபியல் ஆராய்ச்சியில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.qiagen.com/us/products/discovery-and-translational-research/bioinformatics-solutions/clc-genomics-workbench

MEGA – மூலக்கூறு பரிணாம பகுப்பாய்வு மற்றும் பையோஜெனிடிக் அனுமானத்தை தீர்மானிப்பதற்கான மென்பொருள்.

இந்த மென்பொருள் பரிணாம உயிரியல் ஆராய்ச்சி மற்றும் மரபணு வேறுபாடு ஆய்வுகள் உட்பட பரவலான பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.megasoftware.net

NCBI Entrez – PubMed மற்றும் GenBank உள்ளிட்ட உயிரியல் மருத்துவ தரவுத்தளங்களில் தேடல் மற்றும் மீட்டெடுப்புக்கான மென்பொருள்.

இந்த மென்பொருள் பயோ இன்ஃபர்மேடிக்ஸ் ஆராய்ச்சியில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.ncbi.nlm.nih.gov/search

ChimeraX – ஒரு மூலக்கூறு மாடலிங் மற்றும் காட்சிப்படுத்தல் மென்பொருள். இது புரத கட்டமைப்புகள் மற்றும் தசைநார்கள் உடனான தொடர்புகளை ஆய்வு செய்ய பயன்படுகிறது.

IWCM

இந்த மென்பொருள் மருந்து கண்டுபிடிப்பு மற்றும் புரதப் பொறியியல் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இணைய முகவரி: https://www.cgl.ucsf.edu/chimerax

## 11.7 BSc Botany படிப்பவர்களுக்கான கூடுதல் படிப்புகள்

### Certificate in Plant Tissue Culture Techniques

தாவர திசு வளர்ப்பு நுட்ப சான்றிதழ் படிப்பில் புதிய திசு ரகங்களை அறிமுகப்படுத்துவதும், மேம்படுத்துவது குறித்தும் கற்றுக்கொள்ளலாம்.

இதன் மூலம், தாவர திசு வளர்ப்பு தொழில்நுட்ப வல்லுநர், ஆராய்ச்சி உதவியாளர், தாவர வளர்ப்பாளர் போன்ற பணிகள் கிடைக்கும்.

இந்தப் படிப்பை இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் வழங்குகிறது.

மேலும் விவரங்களுக்கு: https://www.iihr.res.in

### Diploma in Medicinal Plant Cultivation and Marketing

மருத்துவ தாவர சாகுபடி மற்றும் சந்தைப்படுத்தல் படிப்பைப் படிப்பவர்களுக்கு மருத்துவ தாவர சாகுபடியாளர், மூலிகை தயாரிப்பு உற்பத்தியாளர், சந்தைப்படுத்தல் நிர்வாகி போன்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு:

https://nia.nic.in/medicalplant.html

IWCM

https://www.igmpiindia.org/Post-Graduate-Diploma-in-Herbal-Medicines.php

https://psgpharma.ac.in/home-news/one-year-p-g-diploma-in-production-quality-control-marketing-of-medicinal-plants

### Diploma in Horticulture (DHORT)

வேலை வாய்ப்புகள்: தோட்டக்கலை நிபுணர், இயற்கைக் கட்டிடக் கலைஞர், தோட்ட வடிவமைப்பாளர்

நிறுவனம்: இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் கேரள வேளாண் பல்கலைக்கழகம்

இணையதள முகவரி: http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/soa/programmes/detail/770/2

https://www.tnhorticulture.tn.gov.in/diploma

https://iisdt.in/product/diploma-in-horticulture

| | |
|---|---|
| Certificate Course in Plant Ecology<br>வேலை வாய்ப்புகள்: சூழலியலாளர், இயற்கை ஆர்வலர் | படிப்பை வழங்கும் கல்வி நிறுவனம்<br>டெல்லி பல்கலைக்கழகம்<br>https://www.du.ac.in/index.php?page=other-courses<br>https://www.ecology.edu/courses.html |
| Diploma in Seed Production Technology<br>வேலை வாய்ப்புகள்: விதை தொழில்நுட்பவியலாளர், விதை உற்பத்தி மேலாளர், விதை தரக் கட்டுப்பாட்டு அலுவலர் | கோழிக்கோடு பல்கலைக்கழகம்<br>https://iht.edu.in/post-graduate-diploma-in-seed-nursery-and-quality-planting-material-production |
| Certificate Course in Plant Taxonomy<br>வேலை வாய்ப்புகள்: தாவர வகை பிரிவாளர், தாவரவியல் ஆய்வு அலுவலர், ஹெர்பேரியம் காப்பாளர் | படிப்பை வழங்கும் கல்வி நிறுவனம்<br>https://www.uoc.ac.in/academics/Course_details/34 |
| Diploma in Mushroom Cultivation<br>வேலை வாய்ப்புகள்: காளான் வளர்ப்பவர், உற்பத்தி மேலாளர், தரக்கட்டுப்பாட்டு அதிகாரி | படிப்பை வழங்கும் கல்வி நிறுவனம்<br>காளான் ஆராய்ச்சி இயக்குநரகம், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்<br>https://www.iihr.res.in/mushroom |
| Certificate Course in Plant Biotechnology<br>வேலை வாய்ப்புகள்:<br>தாவர உயிரி தொழில்நுட்பவியலாளர், ஆராய்ச்சியாளர், மரபணு பொறியாளர் | படிப்பை வழங்கும் கல்வி நிறுவனம்<br>பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்<br>http://bhu.ac.in/coursedesc.aspx?did=1&cid=59 |
| Diploma in Plant Breeding and Genetics<br>வேலை வாய்ப்புகள்: தாவர வளர்ப்பாளர், மரபியல் நிபுணர், ஆராய்ச்சி விஞ்ஞானி | https://www.atpbr.com |

IWCM

| | |
|---|---|
| **Certificate Course in Forest Management and Conservation**<br>வேலை வாய்ப்புகள்: வன மேலாளர், பாதுகாப்பு அதிகாரி, வனவிலங்கு உயிரியலாளர் | படிப்பை வழங்கும் கல்வி நிறுவனம்<br>வன ஆராய்ச்சி நிறுவனம்<br>இணைய முகவரி: https://fri.icfre.gov.in<br>https://gsdp-envis.gov.in<br>http://rcdehradun.ignou.ac.in/programmes/detail/49/2 |

## BSc Botany படிப்பவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய Computer Applications/Software

தாவரவியல் படிப்பவர்கள், R programming language, MATLAB, GIS போன்ற மென்பொருள்களைக் கற்றுக்கொண்டால் வேலை வாய்ப்பை எளிதில் பெறலாம்.

**ImageJ:** தாவரவியலில் தாவரங்களின் பாகங்களின் கட்டமைப்புகளை பாகுப்பாய்வு செய்ய பயன்படும் மென்பொருள்.

இமேஜ் அனாலிஸ்ட் டெக்னிஷியன், ஆராய்ச்சியாளர், தரப் பகுப்பாளர் போன்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

IWCM

**BiodiversityR:** தாவர சமூகத் தரவு உட்பட பல்லுயிர் தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலுக்குப் பயன்படும் R இல் உள்ள தொகுப்பு.

வேலை வாய்ப்புகள்: தரவு ஆய்வாளர், Research associate, பாதுகாப்பு உயிரியலாளர்.

**12**




# துணை மருத்துவப் படிப்புகள்

IWCM

அறிவியல் சார்ந்த பட்டப்படிப்பு படித்திருப்பவர்களுக்கு மருத்துவத்துறையில் நுழைய சரியான வாய்ப்பு பாராமெடிக்கல் படிப்புகள்.

- பாராமெடிக்கல் படிப்பில் சேர்வதற்கு என்றே தனியே கவுன்சிலிங் நடத்தப்படுகிறது.
- இதற்கான விண்ணப்பங்கள் ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்படும்.
- பாராமெடிக்கல் படிப்பில் சேர பன்னிரெண்டாம் வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- பன்னிரெண்டாம் வகுப்பில் குறைந்தப்பட்சம் 40 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.
- பட்டியல் இனத்தவர்/ அருந்ததியினர்/ பழங்குடியினத்தவர் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும்.
- Multi-Purpose Hospital Worker படிப்புக்கு மட்டும் பத்தாம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது.
- Diploma in Medical Record Science படிப்புக்கு பட்டப்படிப்புடன் கூடுதலாக Microsoft Office படித்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

### வயது வரம்பு

பாராமெடிக்கல் படிப்புகளில் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் படிப்பில் சேர விரும்புபவர்கள் 17 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், பொதுப்பிரிவு மற்றும்

பிற்படுத்தப்பட்ட பிரிவினர் 32 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், பட்டியல் இனத்தவர்/ அருந்ததியர்/ பழங்குடி பிரிவைச் சார்ந்தவர்கள் 37 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

டிப்ளோமா இன் பார்மஸி படிப்புக்கு மட்டும் பொதுப்பிரிவு மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், பட்டியல் இனத்தவர்/ அருந்ததியர்/ பழங்குடி பிரிவைச் சார்ந்தவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

### 12.1 இரண்டு ஆண்டு டிப்ளோமா படிப்புகள்

Diploma in Radio Diagnosis Technology (DRDT)/ Diploma in Radio Therapy Technology (DRTT) X-ray, CT Scan, MRI scan தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தி பரிசோதனை செய்வது என கற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| Diploma in Medical Record Science | நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் பற்றிய முழு விவரங்களையும் எவ்வாறு பராமரிப்பது என கற்றுக்கொள்ளலாம். |
| Dental Mechanic (Male) & Dental Hygienist (Female) | பல் பராமரிப்பு, பல் பாதுகாப்பு மற்றும் பல் சிகிச்சை குறித்து கற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி முடித்தவர்கள் பல் மருத்துவமனைகளில் பல் மருத்துவருக்கு உதவியாளர்களாக வேலைவாய்ப்பைப் பெறலாம். |
| Diploma in Medical Laboratory Technology | மருத்துவரின் ஆலோசனை அடிப்படையில் பரிசோதனைகளை செய்துக்கொடுக்கவும், நோயைப்பற்றி பகுத்தறியவும் கற்றுக்கொள்ளலாம். |
| Diploma in Optometry | பார்வை குறைபாடு தொடர்பான பரிசோதனைகள், கண் நோய்களை கண்டறியும் முறைகள், கண் சிகிச்சை முறைகள் குறித்து கற்றுக்கொள்ளலாம். |
| Diploma in Pharmacy | மருந்துகள் குறித்தும், அதை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. மருத்துவர்கள் எழுதி தரும் பிரிஸ்கிரிப்ஷனைப் பார்த்து சரியான மருந்துகளைத் தரும் பார்மசிஸ்ட்டுகள் இவர்கள் தான். |

IWCM

### 12.2 ஓராண்டு டிப்ளோமா படிப்புகள்

- Home Health Care Diploma Course
- Diploma in Ophthalmic Nursing Assistant
- Diploma in Medical Record Science

### 12.3 ஓராண்டு சான்றிதழ் படிப்புகள்

- Cardio Sonography Technician
- ECG/Tread Mill Technician
- Pump Technician
- Cardiac Catheterization Lab Technician
- Emergency Care Technician
- Respiratory Therapy Technician
- Dialysis Technician
- Anaesthesia Technician
- Theatre Technician
- Orthopaedic Technician
- Audiometry Technician
- Hearing Language and Speech Technician
- Clinical, Therapeutic, Nutrition & Food Service Management Technician
- EEG/EMG Course Technician
- Psychiatric Nursing Assistant

IWCM

Multi-Purpose Hospital Worker Course (பத்தாம் வகுப்பு தகுதி நிலை)-
ஒரு வருட படிப்பில் ஆறு மாதம் இன்டர்ன்ஷிப் டிரைனிங் எடுக்க வேண்டும்.





### 12.4 ஆறு மாத படிப்புகள்

Medical Record Technician (MRT) - பத்து மாணவர்கள் டிசம்பர் - மே மாதத்திலும், 10 மாணவர்கள் ஜூன் - நவம்பர் மாதத்திலும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்

IWCM

பயிற்சி காலம் ஆறு மாதம்.

மேலும் விவரங்களுக்கு: https://tnmedicalselection.net

டிப்ளோமா படிப்புக்கு கட்டணம் ரூ.3000 -க்கும் குறைவு. சான்றிதழ் படிப்புக்கு கட்டணம் ரூ. 1000 மட்டுமே!

**Diploma in Clinical Research (DCR)**

விலங்கியல், தாவரவியல், உயிரியல், உயிரி வேதியியல், பயோடெக்னாலஜி படிப்பவர்களுக்கும், மைக்ரோபயாலஜி, பயோடெக்னாலஜி, பார்மஸி போன்ற படிப்பைப் படிப்பவர்கள் கிளினிக்கல் ரிசர்ச் கோர்ஸ் படிக்கலாம்.

தமிழ்நாடு அரசின் அங்கமாக உள்ள அரசு மருத்துவ பல்கலைக்கழகத்திலும் இந்தப் படிப்பு உள்ளது. அறிவியல் பட்டதாரிகள் இந்த கோர்ஸைத் தேர்ந்தெடுத்து சேரலாம்.

மேலும் விவரங்களுக்கு:

https://www.tnmgrmu.ac.in/images/Syllabus-and-curriculam/Allied-Health-Sciences/regulation%20for%20pgdclinres2018019-30102018.pdf

https://www.igmpiindia.org/post-graduation-diploma-in-clinical-research-approved-and-certified-by-quality-council-of-india.html

https://www.ssodl.edu.in/clinical-research-courses-india.php

**Certificate in Patient Care Management**

B.Sc நர்சிங் படிப்பவர்கள் Certificate in Patient Care Management என்ற நோயாளி

பராமரிப்பு மேலாண்மை சான்றிதழ் படிப்பைப் படிக்கலாம்.

இந்தப் படிப்பில், நோயின் தன்மை மதிப்பீடு, நோயாளி பராமரிப்புத் திட்டமிடல் மற்றும் திறம்பட நிர்வகிக்கத் தேவையான திறன்களை மேம்படுத்துதல் போன்றவை அறிந்துகொள்ளலாம்.

இதன் மூலம், பன்னாட்டு மருத்துவமனைகளில் நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பைப் பெறலாம். மேலும் விவரங்களுக்கு:

https://iisdt.in/product/certificate-in-patient-care-management

https://www.ssodl.edu.in/healthcare-course-india.php

## Diploma in Forensic Science

அறிவியல் பட்டப்படிப்பு படித்தவர்கள் தடய அறிவியல் பிரிவில் Diploma in Forensic Science டிப்ளோமா படிக்கலாம். இதன் மூலம், குற்றவியல் விசாரணைகள், தடயவியல் பகுப்பாய்வு, தடயவியல் உளவியல் போன்ற விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றங்களால், குற்றங்கள் நடக்காமல் தவிர்க்க நிறுவனங்கள் தடயவியல் படித்தவர்களின் உதவியை நாடுகின்றன.

மேலும் விவரங்களுக்கு:

https://www.pondiuni.edu.in/programs/p-g-diploma-in-criminology-and-forensic-science

http://www.ignou.ac.in/ignou/aboutignou/school/sol/programmes/detail/393/2

IWCM

## Diploma in Medical Laboratory Technology

இந்த டிப்ளோமா படிப்பில் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் படிப்பை முடிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பாக மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர் மற்றும் மருத்துவ ஆய்வக விஞ்ஞானி போன்ற பணிகள் கிடைக்கும்.

மேற்கண்ட படிப்பை தேசிய மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிறுவனம் வழங்குகிறது. https://niih.org.in

மேலும் விவரங்களுக்கு:

https://tnmgrmu.ac.in/index.php/library/e-questions/ahs-diploma-courses/diploma-in-medical-laboratory-technology.html

https://nios.ac.in/online-course-material/vocational-courses/dmlt.aspx

http://rctrivandrum.ignou.ac.in/programmes/detail/530/2

# 13




## உயர்கல்வி... எங்கு சேரலாம்?

பட்டப்படிப்பு படித்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் முதுநிலை பட்டப்படிப்பில் சேர்கிறார்கள். இவர்கள் முதுநிலை பட்டப்படிப்பு படித்தப்பின்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதனால் படிப்புக்கான காலமும் படிப்புக்கான கட்டணமும் விரயமே.

பட்டப்படிப்புக்குப் பின்பு ஆர்வமும், தகுந்த திட்டமிடலும் இருந்தால் மட்டுமே உயர்கல்வியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

உயர்கல்வி படிக்க ஆர்வமுள்ளவர்கள், நாட்டிலேயே மிகச் சிறந்த உயர் கல்வி நிறுவனத்தையும், அக்கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கும் பிரிவையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இங்குச் சேரும்போது கல்வி உதவித்தொகையும் கிடைப்பதால் நிதி சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம்.

புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும்போது எளிதாக வேலை வாய்ப்பு கிடைப்பதோடு ஆராய்ச்சியாளராகவும் மாற வாய்ப்புகள் உண்டு.

| இந்தியாவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களின் பட்டியல்கள் | | |
|---|---|---|
| **பாடங்கள்** | **புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள்** | **கல்வி நிறுவனத்தில் சேர்வதற்கானத் தேர்வு** |
| Management Studies | Indian Institutes of Management | Common Admission Test (CAT) |
| Engineering | Indian Institutes of Technology | Graduate Aptitude Test in Engineering (GATE) |

| பாடங்கள் | புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் | கல்வி நிறுவனத்தில் சேர்வதற்கானத் தேர்வு |
|---|---|---|
| Pure Science | University Departments and Research Centres | Council of Scientific & Industrial Research – NET exam (CSIR – NET exam) |
| Maths | Math Research Institutions | The Institute of Mathematical Sciences conducts separate exams |
| Economics | The Delhi School of Economics & The Madras School of Economics | Both Institutions conduct separate exams |
| Journalism | The Indian Institute of Mass Communication (IIMC) | IIMC conducts separate exam |
| Sociology | Tata Institute of Social Sciences (TISS) | TISS admission exams |
| Social Service | Madras School of Social Work, Egmore | MSSW admission exams |

IWCM

பின்வரும் பகுதியில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் நிபுணத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களின் பட்டியல் தயாரித்துள்ளோம்.

பட்டியலில் உள்ள கல்வி நிறுவனங்கள் பெரும்பாலானவை மத்திய, மாநில அரசுகளால் நடத்தப்படுபவை.

தனியார் கல்வி நிறுவனங்களாக இருந்தால், அவை நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் அல்லது மாணவர் நலனில் மிகுந்த கவனம் செலுத்தும் கல்வி நிறுவனங்களாகச் செயல்படும்.

## 13.1 Commerce and Arts Courses

| Tamil Literature | English Literature |
|---|---|
| • Central Institute of Classical Tamil, Chennai<br>• International Institute of Tamil Studies, Chennai<br>• Institute of Asian Studies, Chennai<br>• Centre for Tamil Culture, Madurai<br>• French Institute of Pondicherry<br>• Tamil University, Thanjavur<br>• University of Madras, Chennai | • Jawaharlal Nehru University (JNU), New Delhi,<br>• University of Delhi, New Delhi<br>• University of Hyderabad, Hyderabad<br>• The English and Foreign Languages University (EFLU) Hyderabad<br>• University of Madras, Chennai |

IWCM

### Economics

பொருளாதாரம் படிப்பவர்கள் உயர்கல்விக்கு செல்லும் போது இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்று M.A., Economics சேர்வது. இரண்டாவது M.Sc. Econometrics சேர்வது. இந்தியாவிலேயே புகழ்பெற்ற மெட்ராஸ் ஸ்கூல் எக்னாமிக்ஸ் உள்ளது. இங்கு, M.A. General Economics, M.A. Financial Economics, M.A. Applied Quantitative Finance, M.A. Actuarial Economics, M.A. Environmental Economics என ஐந்து முதுநிலை படிப்புகள் உள்ளன. மேற்கண்ட படிப்பில் சேர தனியே நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது.

**முக்கியமான பொருளாதார படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள்**

- Delhi School of Economics (DSE)
- Jawaharlal Nehru University (JNU)
- Indian Statistical Institute (ISI)
- Madras School of Economics (MSE)
- Indira Gandhi Institute of Development Research (IGIDR)
- Banaras Hindu University (BHU)
- Centre for Economic Studies and Planning (CESP)
- University of Hyderabad

## Commerce

பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் போது B.Com படிப்பில் சேர பெரிய அளவில் போட்டி இருக்கிறது. ஆனால், B.Com/BBA முடித்த பின்பு உயர்கல்வியில் சேர அந்தளவுக்கு போட்டி இருப்பதில்லை. கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக MBA படிப்பில் சேர அதிகளவில் போட்டி இருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக MBA படிப்பில் சேர அவ்வளவாக போட்டி இல்லை. இருந்தாலும் இந்திய அளவில் சில கல்வி நிறுவனங்களில் சேர எப்போதுமே போட்டி இருக்கிறது. அத்தகைய கல்வி நிறுவனங்களில் சில:

- Indian Institute of Management Ahmedabad (IIMA)
- Indian School of Business (ISB)
- Institute of Management Technology (IMT) Ghaziabad
- Indian Institute of Technology Delhi (IIT Delhi)
- Xavier School of Management (XLRI)
- Indian Institute of Foreign Trade (IIFT)
- Symbiosis Institute of Business Management (SIBM) Pune,
- National Institute of Industrial Engineering (NITIE)
- Faculty of Management Studies (FMS) Delhi
- Jamnalal Bajaj Institute of Management Studies (JBIMS)

IWCM

## Public Administration

**பொது நிர்வாகப் படிப்பை வழங்கும் உயர் கல்வி நிறுவனங்கள்**

யூனியன் பப்ளிக் சர்வீஸ் தேர்வில் பொது நிர்வாகப் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் பொது நிர்வாகப்படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மதிப்பு உயர்ந்திருக்கிறது. இந்தியாவில் கீழ்கண்ட நிறுவனங்கள் பொது நிர்வாகப் படிப்பில் முக்கியமான இடங்களில் உள்ளன.

- Indian Institute of Public Administration (IIPA)
- National Institute of Public Finance and Policy (NIPFP)
- Indian Institute of Management (IIM) Ahmedabad
- Indian Institute of Management (IIM) Bangalore
- Indian School of Business (ISB), Hyderabad
- Tata Institute of Social Sciences (TISS), Mumbai
- National Law School of India University (NLSIU) Bangalore
- Indian Institute of Technology (IIT) Delhi
- Delhi School of Economics
- University of Delhi
- National Institute of Rural Development and Panchayati Raj (NIRDPR), Hyderabad

### History

வரலாற்றுப் பாடத்தை கல்லூரியில் தேர்ந்தெடுத்தவர்கள் போட்டித்தேர்வுகளில் கவனம் செலுத்துவதால் உயர்கல்வி நிறுவனங்களில் சேர அவ்வளவாக போட்டி இருப்பதில்லை. ஆராய்ச்சியில் ஆர்வமிருப்பவர்கள் உயர்கல்வி படிக்க கீழ்கண்ட கல்வி நிறுவனங்களில் சேர விண்ணப்பிக்கலாம்.

- Jawaharlal Nehru University (JNU)
- University of Delhi
- Banaras Hindu University (BHU)
- Aligarh Muslim University (AMU)
- University of Hyderabad

## 13.2 Maths, Computer Science & Engineering


### Mathematics

பொதுவாக உள்ளூர் அளவில் B.Sc. Maths படிப்பதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், உயர்கல்வியில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர போட்டி நிலவுகிறது. காரணம், இந்தக் கல்வி நிறுவனங்களில் சேர்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், இந்தக் கல்வி நிறுவனங்களில் பயில்பவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பையும் வழங்குகிறார்கள்.

இந்தியாவில் புகழ்பெற்ற கணித கல்வி நிறுவனங்களுக்கு அணுசக்தி துறை பெருமளவில் நிதியுதவி செய்கிறது.

**கீழ்கண்ட கல்வி நிறுவனங்கள் கணிதப்பாடத்தில் புகழ்பெற்றவை**

- Indian Institute of Science (IISc), Bangalore
- Indian Statistical Institute (ISI), Kolkata
- Tata Institute of Fundamental Research (TIFR), Mumbai
- Chennai Mathematical Institute (CMI), Chennai
- Harish-Chandra Research Institute (HRI), Allahabad
- Institute of Mathematical Sciences (IMSc), Chennai
- Saha Institute of Nuclear Physics (SINP), Kolkata
- Indian Institute of Technology (IIT), Bombay
- Institute of Science Education and Research, (IISER), Pune
- Institute of Mathematical Sciences (IMSc), Bangalore



## Computer Science

கடந்த முப்பது ஆண்டுகளாக முன்னணி பாடமாக உள்ளது கம்ப்யூட்டர் சயின்ஸ். காரணம், கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்தால் வேலை நிச்சயம் என்று இருந்தது. கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடத்தை மட்டுமே நம்பி பல சுயநிதி பொறியியல் கல்லூரிகள் திறக்கப்பட்டன. கல்லூரியில் பாடத்திட்டங்கள் இருந்தனவே தவிர எந்தவிதமான ஆராய்ச்சியோ கற்றலில் மேம்பாடு போன்றவை இல்லாததால் இப்போது மாணவர்கள் சேர்க்கையில் போராட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால், நாளுக்கு நாள் மாறி வரும் தொழில்நுட்பத்துக்கு தகுந்தாற்போல் புதுப்புது ஆராய்ச்சிகளால் பல கல்வி நிறுவனங்கள் நிபுணத்துவம் பெற்று விளங்குகின்றன.

இந்தியாவில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பிரிவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள்

- Indian Institute of Technology (IIT) Delhi
- Indian Institute of Technology (IIT) Bombay
- Indian Institute of Technology (IIT) Kanpur
- Indian Institute of Technology (IIT) Kharagpur
- Indian Institute of Science (IISc) Bangalore
- International Institute of Information Technology (IIIT) Hyderabad
- National Institute of Technology (NIT) Trichy
- Birla Institute of Technology and Science (BITS) Pilani
- Indian Statistical Institute (ISI) Kolkata
- Anna University Chennai

## Engineering

'நாங்க இன்ஜினீயரிங் படிச்சிருக்கோம். நாங்கள் உயர்கல்வி சேர வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்பவர்கள் உண்டு. முதலில் நீங்கள் GATE – எக்ஸாமுக்கு தயாராகுங்கள். GATE exam யில் நிறைய மதிப்பெண் பெற்று கீழ் கண்ட கல்விநிறுவனங்களில் சேர்ந்து பொறியியல் பிரிவில் நிபுணத்துவம் பெறுங்கள்.

| படிப்புகள் | கல்வி நிறுவனம் |
|---|---|
| M.Tech. in Computer Science and Engineering | Indian Institute of Technology (IIT), Bombay |
| Mechanical Engineering | Indian Institute of Technology (IIT),Delhi |
| Civil Engineering | Indian Institute of Technology (IIT), Kharagpur |
| Electrical Engineering | Indian Institute of Technology (IIT), Madras |
| Aerospace Engineering | Indian Institute of Science (IISc), Bangalore |
| M.Sc. in Environmental Sciences | TERI University, Delhi |

IWCM

**உயர் கல்வி நிறுவனங்களில் படிப்பதால்**

- வெற்றிகரமான வாழ்க்கையை உருவாக்க ஒரு வலுவான அடித்தளம்
- கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது
- இங்கு நடத்தப்படும் பாடத்திட்டங்கள் மதிப்புமிக்கதாகக் கருதப்படுகின்றன
- இங்கு படித்தவர்கள் வெற்றிகரமானவர்களாக மாறி இருக்கிறார்கள்

இந்தக் கல்வி நிறுவனங்களில் சேர போட்டி இருந்தாலும், பட்டப்படிப்பு படிக்கும்போதே திட்டமிட்டு படித்தால் உயர்கல்வி நிறுவனத்தில் சேர்வதோடு, உங்களுடைய இலக்கையும் அடையலாம்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் M.E / M.Tech சேர Engineering Entrance Test and Admissions (CEETA- PG) என்ற பெயரில் நுழைவுத்தேர்வு நடத்துகிறது. நுழைத்தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் கலந்தாய்வின் அடிப்படையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் நான்கு முக்கிய அங்கமாக உள்ள கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி, குரோம்பேட்டையில் உள்ள Madras Institute of Technology (MIT) யில் சேரலாம். தமிழ்நாட்டில் உள்ள பிற பொறியியல் கல்லூரியிலும் M.E / M.Tech சேர முடியும்.

தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் உள்பட இதர கல்லூரிகளில் MBA, MCA படிப்பில் சேர Tamil Nadu Common Entrance Test (TANCET) எழுதி கலந்தாய்வில் கலந்துகொண்டு கல்லூரியில் சேரவேண்டும்.

## 13.3 Science Courses

### Physics

இயற்பியல் பாடத்தில் உலக அளவில் இந்தியாவில் பல கல்வி நிறுவனங்கள் புகழ்பெற்றவையாக உள்ளன. இத்தகைய கல்வி நிறுவனங்களுக்கு அணுசக்தி துறையும் நிதியுதவி வழங்கி வருகிறது. இயற்பியல் பல சிறப்பு பிரிவுகளில் பல கல்வி நிறுவனங்கள் நிபுணத்துவத்தை பெற்று சிறந்த கல்வி நிறுவனங்களாகவும், ஆராய்ச்சி மையங்களாகவும் உள்ளன.

| சிறப்பு பிரிவுகள் | சிறப்பு கல்வி நிறுவனங்கள் |
|---|---|
| • Atomic Physics<br>• Condensed Matter Physics<br>• Astrophysics<br>• High-Energy Physics<br>• Nuclear Physics<br>• Particle Physics<br>• Quantum Field Theory and String Theory<br>• Quantum Optics and Plasma Physics<br>• Biophysics and Quantum Information<br>• Materials Science<br>• Quantum Mechanics<br>• Solid-State Physics<br>• Infectious Diseases | • Indian Institute of Science (IISc), Bangalore<br>• Tata Institute of Fundamental Research (TIFR), Mumbai<br>• Institute of Physics (IOP), Bhubaneswar<br>• Harish-Chandra Research Institute (HRI), Allahabad<br>• Department of Physics, Indian Institute of Technology (IIT) Delhi<br>• Department of Physics, Indian Institute of Technology (IIT) Kanpur<br>• Department of Physics and Astro-physics, University of Delhi<br>• Department of Physics, Indian Institute of Science Education and Research (IISER) Pune<br>• School of Physical Sciences, Jawaharlal Nehru University (JNU), New Delhi<br>• Centre for Excellence in Basic Sciences (CEBS), Mumbai |

IWCM



IWCM

## Chemistry

**வே**தியியல் பாடத்தில் Organic, Inorganic, Physical, Analytical Chemistry, Polymer, Pharmaceutical Chemistry போன்ற பல பிரிவுகள் உள்ளன. வேதியியல் பாடங்களில் நிறைய ஆராய்ச்சி சார்ந்த பணிகள் நடந்து வருகின்றன. இதனால், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் வேதியியல் துறை சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு நிறையவே நிதியுதவி வழங்கி வருகிறது.

### இந்திய அளவில் வேதியியல் பாடத்தில் சிறப்பு பெற்ற கல்வி நிறுவனங்கள்

- Indian Institute of Science Education and Research (IISER), Pune
- Jawaharlal Nehru University (JNU), New Delhi
- Indian Institute of Technology (IIT), Bombay
- Indian Institute of Technology (IIT), Delhi
- Indian Institute of Technology (IIT), Kanpur
- Indian Association for the Cultivation of Science (IACS), Kolkata
- National Chemical Laboratory (NCL), Pune
- University of Hyderabad, Hyderabad
- Indian Institute of Technology (IIT), Madras
- Indian Institute of Science (IISc), Bangalore

## Biotechnology

பயோடெக்னாலஜி பிரிவில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, சுற்றுச்சூழல் துறை, சுகாதாரத் துறை போன்ற பல துறைகள் பயோடெக்னாலஜி சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்குகின்றன.

தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களின் பல உட்பிரிவுகள் பயோடெக்னாலஜி பிரிவின் சிறப்புப் பிரிவுகளாக உள்ளன. இத்தகைய பிரிவுகளில் ஆராய்ச்சிகளும் அதிகளவில் நடந்து வருகின்றன.

### சிறப்புப் பிரிவுகள்

- Biomedical Engineering
- Systems and Synthetic Biology
- Molecular Biophysics
- Molecular Medicine
- Molecular Biology and Genetics
- Molecular Biotechnology
- Structural Biology
- Bioinformatics
- Cellular and Developmental Biology
- Neuroscience
- Genomics and Functional Genomics
- Systems Biology
- Translational Medicine
- Evolutionary Biology
- Computational Biology
- Genetic Diseases
- Epigenetics
- Immunology
- Microbiology
- Infectious Diseases

### சிறப்பு கல்வி நிறுவனங்கள்

- Indian Institute of Technology (IIT) Delhi
- Jawaharlal Nehru University (JNU)
- Indian Institute of Science (IISc) Bangalore
- National Centre for Biological Sciences (NCBS) Bangalore,
- Institute of Genomics and Integrative Biology (IGIB) Delhi
- Tata Institute of Fundamental Research (TIFR) Mumbai
- Centre for Cellular and Molecular Biology (CCMB) Hyderabad
- Indian Institute of Technology (IIT) Bombay
- Centre for DNA Fingerprinting and Diagnostics (CDFD) Hyderabad
- National Institute of Immunology (NII) Delhi

IWCM

## Zoology

### சிறப்புப் பிரிவுகள்

- Animal Behaviour
- Ecology and Evolution
- Genetics and Genomics
- Cell and Molecular Biology
- Developmental Biology
- Animal Physiology
- Ecology and Biodiversity
- Endocrinology
- Molecular and Cellular Biology
- Genetics and Biotechnology
- Biodiversity and Conservation
- Environmental Biology

### சிறப்பு கல்வி நிறுவனங்கள்

- Jawaharlal Nehru University (JNU)
- Indian Institute of Science Education and Research (IISER) Kolkata
- University of Delhi
- University of Calcutta
- University of Mumbai
- University of Madras
- University of Hyderabad
- Aligarh Muslim University
- University of Pune
- Bharathidasan University

IWCM

## Botany

### சிறப்புப் பிரிவுகள்

- Plant Biotechnology
- Plant Molecular Biology
- Genetics
- Plant Science
- Molecular Biology
- Plant Physiology
- Biochemistry
- Plant Taxonomy and Biosystematics
- Plant Developmental Biology
- Plant Breeding and Genetics,
- Plant Pathology
- Microbial Biotechnology

இந்த பிரிவுகள் ஒவ்வொன்றும் பல்வேறு ஆராய்ச்சியில் கவனம் ஈர்த்து வருகின்றன.

### சிறப்பு கல்வி நிறுவனங்கள்

- Indian Institute of Science Education and Research (IISER) Kolkata
- Jawaharlal Nehru University (JNU)
- University of Delhi, University of Hyderabad
- Indian Agricultural Research Institute (IARI)
- University of Calcutta
- Banaras Hindu University (BHU)
- University of Pune
- University of Mumbai
- Aligarh Muslim University




IWCM

## Agriculture

தாவரவியல் மற்றும் பயோடெக்னாலஜியில் உள்ள பல பிரிவுகள் வேளாண்மை சார்ந்து உள்ளன. வேளாண்மை படிப்பு சார்ந்த கல்வி நிறுவனங்கள்

- Indian Agricultural Research Institute (IARI)
- National Dairy Research Institute (NDRI)
- National Institute of Agricultural Extension Management (MANAGE)
- National Institute of Agricultural Economics and Policy Research (NIAP)
- Indian Council of Agricultural Research (ICAR)
- Central Institute of Agricultural Engineering (CIAE)
- Tamil Nadu Agricultural University (TNAU)
- Acharya N.G. Ranga Agricultural University (ANGRAU)
- Dr. Rajendra Prasad Central Agricultural University (RPCAU)
- Indian Institute of Farming Systems Research (IIFSR)

# 14




## உயர்கல்வி படிக்க உதவித்தொகை

பட்டப்படிப்பு சிறப்பாய் முடிக்கும் நிலையில் இருக்கும் ஒரு சில மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையும், இலக்கும் இருக்கும். ஆனால், வீட்டின் பொருளாதாரம் அதற்கு இடம் கொடுக்காமல் இருக்கலாம். இது போன்ற சூழலில் உயர்கல்வி பயில மத்திய அரசு, மாநில அரசு மட்டுமல்ல, பன்னாட்டு நிறுவனங்களும், பல தன்னார்வு தொண்டு நிறுவனங்களும் உதவித்தொகை வழங்குகின்றன.

IWCM

| Name of scheme | Website |
|---|---|
| Central Government Scholarship Schemes | https://scholarships.gov.in |
| INSPIRE Scholarship | https://dst.gov.in/inspire-scheme-innovation-science-pursuit-inspired-research |
| Kishore Vaigyanik Protsahan Yojana Exam (KVPY Exam) | http://www.kvpy.iisc.ernet.in |
| Tamil Nadu Backward Classes Welfare Department Scholarship | https://www.bcmbcmw.tn.gov.in |
| Azim Premji Foundation Fellowship Program: | https://azimpremjifoundation.org |
| Tata Trusts Scholarship Programs | https://www.tatatrusts.org/our-work/individual-grants-programme/education-grants |

| name of scheme | Website |
|---|---|
| ONGC Scholarship Programs: | https://ongcscholar.org/# |
| L&T Build India Scholarship | https://www.lntecc.com/build-india-scholarship |
| Fair and Lovely Foundation Scholarship | https://www.glowandlovelycareers.in/en/scholarship-for-women |
| Narotam Sekhsaria Foundation Scholarships | https://pg.nsfoundation.co.in |
| Shriram Capital Scholarship Program: | http://www.shriramfoundation.org/scholarships.html |
| K.C. Mahindra Scholarship for Postgraduate Studies | https://www.kcmet.org/what-we-do-Scholarship-Grants.aspx |
| Indian Oil Sports Scholarships | https://iocl.com/pages/Sports-Scholarship-2022 |
| G.P. Birla Education Foundation Scholarships | https://www.gpbirlaedufoundation.com |
| Foundation for Excellence Scholarships | https://ffe.org/scholarships |
| Tamil Nadu Foundation Scholarship Program | http://www.tnfusa.org/education/scholarships |
| Rotary Foundation Scholarships | https://www.rotary.org/en/our-programs/scholarships |
| Vidyasaarathi Scholarship Program | https://www.vidyasaarathi.co.in/Vidyasaarathi |
| Saksham Scholarship by AISECT Group | https://www.aisect.org/saksham-scholarship |
| Arya Samaj Charitable Foundation Scholarships | https://www.aryagan.org/scholarship-fund.html |
| The Hans Foundation Scholarship Program | https://thehansfoundation.org/fellowship-program |
| Ramakrishna Mission Vivekananda Educational and Research Institute Scholarships | https://rksmvv.ac.in/prizes-grants-and-scholarships |

IWCM

## 15




## பட்டதாரிகள் சுயமாக தொழில் தொடங்க மானியத்துடன் கடனுதவி

பட்டப்படிப்பு படிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வேலை வாய்ப்புப் பெற வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஒரு சிலருக்கு சொந்தமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு உதவிகளைச் செய்து தொழில் முனைவோர்களின் கனவை நிறைவேற்ற தயாராக உள்ளது.

IWCM

சுய தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் பயிற்சி நிறுவனமும் (https://msmedi-chennai.gov.in/GARMS_Admin/home.aspx), மாநில அரசின் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும் பல்வேறு பயிற்சிகளை வழங்குகின்றன.

இவ்விரண்டு நிறுவனங்கள் திட்ட அறிக்கை தயாரிப்பு முதல் வங்கியில் கடனுதவிப் பெறுவது வரை பல்வேறு பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்குகின்றன.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், புதியதாக தொழில் தொடங்குவோர்க்கு பல்வேறு துறைச் சார்ந்த நிபுணர்களைக் கொண்டு ஒரு மாத இலவச பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இதனை அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட தொழில் மையத்தில் பதிவுச் செய்துகொள்ள வேண்டும்.

மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் பயிற்சி மண்டல அலுவலகம் சென்னை கிண்டியில் உள்ளது. கிளை அலுவலகங்கள் கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடியில் உள்ளன.

மாநில அரசின் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. இதன் இணையதள முகவரி: https://www.msmetamilnadu.tn.gov.in/edii.php

ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும்



மாவட்ட தொழில் மையங்கள் உள்ளன. இங்குத் தொழில் தொடங்குவதற்கான ஆலோசனை வழங்கப்படுகிறது.

IWCM

சுய தொழிலை எவ்வாறு தேர்வு செய்வது, முறையாக எவ்வாறு பதிவு செய்வது, என்னென்ன உரிமங்கள் வாங்க வேண்டும், தொழிலுக்கான சந்தை வாய்ப்பு உள்ளதை எவ்வாறு கண்டறிவது உள்ளிட்ட பல தொழில்சார் விளக்கங்களும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

சுய தொழில் தொடங்க இருப்பவர்கள் எளிதான கடன் பெறும் வகையில் திட்ட அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது, மத்திய, மாநில அரசின் மானியங்களை எவ்வாறு பெறுவது, அதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது குறித்து தொழில் மையங்களில் ஆலோசனை வழங்கப்படுகிறது.

நான்கு முதன்மையான திட்டங்கள் மூலம் தொழில் தொடங்க மானியமும், கடனுதவியும் வழங்கப்படுகிறது.

### New Entrepreneur cum Enterprise Development Scheme (NEEDS)

பட்டதாரி இளைஞர், தன் குடும்பத்தில் முதல் தொழில் முனைவோராக இருக்கும் பட்சத்தில், புதிய தொழில் திட்டத்துக்குக் கீழ் 10 லட்ச ரூபாய் முதல் ஐந்து கோடி ரூபாய் வரை கடனுதவிப் பெற உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற 21 வயதிலிருந்து 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

பெண்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பழங்குடி மற்றும் பட்டியலினத்தவர்களாக இருந்தால் 45 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்தில், முதலீட்டுத்தொகையில் மானியமாக 25 சதவீதமும், வங்கியில் பெறப்படும் கடனுக்கு வட்டி மானியமாக மூன்று சதவிகிதமும் வழங்கி

### நிறுவனத்தை பதிவு செய்வது எப்படி?

**பொ**துவாக, தொழில் தொடங்கும் போது, நிறுவனத்தை பதிவு செய்வது, மானியத்துக்கு விண்ணப்பிப்பது என பல வேலைகள் இருக்கும். சிறு தொழில் நிறுவனமாக இருந்தால் அதனை உள்ளூரிலேயே பதிவு செய்து விடலாம்.

https://udyamregistration.gov.in/Government-India/Ministry-MSME-registration.htm

இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து நிறுவனத்தைத் தொடங்கினால் ஆடிட்டர் அலுவலகத்தை அணுகி மத்திய அரசின் கம்பெனி சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யலாம்.

https://www.mca.gov.in/MinistryV2/incorporation_company.html

தொழில்முனைவோரை ஊக்குவிக்கிறது அரசு. முதலீட்டு மானியமாக அதிகபட்சமாக 75 லட்சம் ரூபாய் வரை கிடைக்கும்.

இந்த திட்டம் குறித்து மேலும் விவரங்களுக்கு: https://www.tiic.org/need-scheme

### Annal Ambedkar Business Champions Scheme (AABCS)

அண்ணல் அம்பேத்கர் பிஸினஸ் சாம்பியன்ஸ் ஸ்கீம் (Annal Ambedkar Business Champions Scheme (AABCS) என்ற திட்டத்தின் கீழ் பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள் புதிய தொழில் தொடங்க கடனுதவி மானியம் வழங்கப்படுகிறது.

IWCM

இத்திட்டத்தின் கீழ் 1.5 கோடி வரையிலான திட்டத்துக்கு 35 சதவிகிதம் மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் பத்து வருடங்களுக்குள்ளான கடனுக்கு 6 சதவிகித வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வயது வரம்பு 55 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### Unemployed Youth Employment Generation Programme (UYEGP)

வேலையில்லாத இளைஞர்கள் வேலையை உருவாக்கும் திட்டத்தின் கீழ் கடனுதவியும், மானியமும் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி அல்லது சேவைப் பிரிவில் 5 லட்சம் முதல் 15 லட்சம் ரூபாய் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது.

இதில் பயன்பெறுவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ஐந்து லட்சத்துக்கு கீழ் இருக்க வேண்டும்.

தொடங்க இருப்பவர்கள் திட்ட மதிப்பீட்டில் 5 முதல் 10 சதவிகிதம் சொந்தமாக முதலீடு செய்ய வேண்டும்.

இத்திட்டத்தில், மூலதன முதலீட்டில் 25 சதவிகிதம் வரை மானியம் வழங்கப்படு கிறது. அதிகபட்சமாக 2.5 லட்சம் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு: https://www.msmeonline.tn.gov.in/uyegp




## Prime Minister's Employment Generation Programme

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு சிறு மற்றும் குறுந்தொழில் சார்ந்து புதிய தொழில் தொடங்க உள்ளோருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயனடைய 18 வயது பூர்த்தியடைந்திருந்தாலே போதுமானது.

பொருள் உற்பத்தி சாந்த திட்டங்களுக்கு இருபத்தி ஐந்து லட்சம் வரையிலும், சேவை சார்ந்த தொழிலுக்கு ரூ. 10 லட்சம் வரையிலும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவோர்கள் பொதுப்பிரிவினராக இருந்தால் 10 சதவிகிதமும், இதர பிரிவினராக இருந்தால் 5 சதவிகிதமும் முதலீட்டுக்குப் பயன்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் 15 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு: kviconline.gov.in/pmegpeportal

### சலுகைகள் ஏராளம்

புதியதாகத் தொழில் தொடங்குவோருக்கு, தமிழ்நாடு அரசு உருவாக்கி உள்ள தொழிற்பேட்டைகளில் இடம் ஒதுக்கீடு, தொழிற்சாலைக்குத் தேவையான நிலம் வாங்கும் போது பதிவு கட்டணத்தில் சலுகை, மின் கட்டணச் சலுகை என ஏராளமான சலுகைகளை வழங்குகிறது.

மேலும் விவரங்களுக்கு: https://www.msmetamilnadu.tn.gov.in/govt-orders.php


ஆக, பட்டதாரியான உங்களுக்குத் தகுந்த தொழில் திட்டமிருந்தால் நீங்களும் தொழில் அதிபராகலாம். புதியதாக தொழில் தொடங்க ஆர்வமே முதல் முதலீடு!

### புதுமையான யோசனைகள் இருந்தால் நீங்களும் தொடங்கலாம் ஸ்டார்ட் அப்!

கல்லூரி மாணவர்களிடையே புதுமையான பிஸினஸ் ஐடியா அல்லது சமுதாயத்துக்கு மிகவும் பயனுள்ள புதுமையான தயாரிப்பு குறித்த யோசனை இருந்தால், அதனை நிறுவனமாக மாற்ற ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. மத்திய அரசும், மாநில அரசும் ஸ்டாப் அப்-க்கு உதவுவதற்கு எனத் தனிப் பிரிவைத் தொடங்கி ஏராளமான நிதியையும் ஒதுக்கி உள்ளன. இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு: https://www.startupindia.gov.in மற்றும் https://startuptn.in

IWCM

IWCM



# INNER WHEEL CLUB OF MADRAS

**District 323**